RNI-NO: TNTAM/2021/83936

Postel Regd. No: TN/5/SVA/2023-2025




# மாலை தந்தி
MALAI THANTHI

தமிழால் வெல்வோம்

DAILY EVENING

மாலை நாளிதழ்




சிவகங்கை | மலர்-4 | இதழ்- 310 | நவம்பர்.10 2025 திங்கள்கிழமை | malaithanthi2020@gmail.com | 4 பக்கங்கள் | விலை ரூ. 5



## துரோகங்களால் அதிமுகவை வீழ்த்த முடியாது: பழனிசாமி திட்டவட்டம்

சேலம், நவ.10-

துரோகங்களால் அதிமுகவை வீழ்த்த முடியாது என்று அக்கட்சியின் பொதுச் செயலாளர் பழனிசாமி கூறினார்.

சேலம் மாவட்டம் ஓமலூரில் நேற்று நடைபெற்ற அதிமுக 54ம் ஆண்டு தொடக்க விழா பொதுக்கூட்டத்தில் பழனிசாமி பேசியதாவது: ஜெயலலிதா மறைவுக்குப் பிறகு அதிமுக தொடர்ந்து சோதனைகளை சந்தித்து வருகிறது. ஆனாலும், மக்கள் செல்வாக்கு குறையவில்லை. ரூ.30,000 கோடி ஊழல் செய்த திமுக தேர்தலை சந்திக்க தயாராக இருக்கிறது. ஸ்டாலின் எவ்வளவு சூழ்ச்சிகள் செய்தாலும் பலிக்காது. துரோகங்களால் அதிமுகவை வீழ்த்த முடியாது.

எத்தனை துரோகிகள் கட்சியை வீழ்த்த முயன்றாலும், அத்தனை பேரையும் வீழ்த்தி அதிமுக தலைநிமிர்ந்து நிற்கிறது. பெண்களுக்கு பாதுகாப்பு இல்லாத ஆட்சிதான் தற்போது தமிழகத்தில் நடக்கிறது. போக்சோ சட்டத்தில் பாதிக்கப்பட்டவர்களுக்கு ரூ.104 கோடி நிவாரணம் வழங்கப்பட்டதாக பெருமையாக கூறுகின்றனர். பாலியல் வன்கொடுமையை போக்சோ சட்டத்தை கடுமையாக அமல்படுத்துவதால்தான் தடுக்க முடியும். நிவாரணம் கொடுப்பதால் அல்ல.

திமுக அரசு தனக்கு வேண்டப்பட்டவர்களை டிஜிபியாக கொண்டுவர வேண்டுமெனக் கருதி, அதற்கான பட்டியலை அனுப்பவில்லை. உள்ளாட்சி பணி நியமனத்தில் ரூ.888 கோடி ஊழல் நடந்துள்ளது. 5.50 லட்சம் அரசு காலி பணியிடங்கள் நிரப்பப்படவில்லை. திமுக ஆட்சியில் 4 ஆண்டுகளில் 75,000 பேர் பணி ஓய்வுபெற்ற நிலையில், 50 ஆயிரம் பேரைத்தான் அரசுப் பணியிடங்களில் நியமித்துள்ளனர். படித்தவர்களையும், படிக்காதவர்களையும் ஏமாற்றும் ஒரே கட்சி திமுக. தேர்தல் அறிக்கையில் அறிவித்தபடி பழைய ஓய்வூதிய திட்டத்தையும் அமல்படுத்தவில்லை. அனைத்து தரப்பினருக்கும் அதிமுகதான் பாதுகாப்பான ஆட்சியாக இருக்கும்.

ஆளுங்கட்சியாக இருந்தாலும், எதிர்க்கட்சியாக இருந்தாலும் மக்கள் பிரச்சினைக்கு குரல் கொடுப்பது அதிமுகதான். 2026 சட்டப்பேரவைத் தேர்தலில் திமுக வெற்றி பெற முடியாது என்ற நிலை ஏற்பட்டுள்ளதால், மாணவர்களுக்கு லேப்டாப் கொடுக்கப்படும் என்று அறிவித்துள்ளனர். மகளிர் உரிமைத் தொகையை மையப்படுத்தி, வாக்குகளைப் பெற திமுக அரசியல் தந்திரம் செய்கிறது.

வாக்காளர் சிறப்பு தீவிர திருத்தத்தில், அதிமுகவுக்கு வாக்களிக்க கூடியவர்களை வாக்காளர் பட்டியலில் இருந்து நீக்க முயற்சிப்பார்கள்.

இவ்வாறு பழனிசாமி பேசினார்.

## ஆர்எஸ்எஸ் ஏன் பதிவு செய்யப்படவில்லை? மோகன் பகவத் விளக்கம்

மும்பை, நவ.10-

பதிவு இல்லாமல் செயல்படுவதற்காக ஆர் எஸ்எஸ் அமைப்பை காங்கிரஸ் தலைவர்கள் விமர்சித்த நிலையில், ஆர்எஸ்எஸ் தனிநபர்களின் அமைப்பாக அங்கீகரிக்கப்பட்டுள்ளது என்று அதன் தலைவர் மோகன் பகவத் கூறினார். மேலும், அவர் இந்து தர்மம் கூட பதிவு செய்யப்படவில்லை என்றும் கூறினார்.

கர்நாடக அமைச்சரும், காங்கிரஸ் தலைவருமான பிரியங்க் கார்கே, தேசத்திற்கு சேவை செய்வதாகக் கூறிக்கொள்ளும் ஆர்எஸ்எஸ் ஏன் பதிவு செய்யப்படாத அமைப்பாக உள்ளது என்று கேள்வி எழுப்பினார். பிரியங்க் கார்கேவின் கருத்துகளுக்கு பதிலளித்த ஆர்எஸ்எஸ் தலைவர் மோகன் பகவத், "ஆர்எஸ் எஸ் 1925 இல் தொடங்கியது. நாங்கள் பிரிட்டிஷ் அரசாங்கத்தில் பதிவு செய்திருக்க வேண்டும் என்று விரும்புகிறீர்களா?. சுதந்திரத்திற்குப் பிறகு, இந்திய அரசு பதிவை கட்டாயமாக்கவில்லை.

சட்டம் பதிவு செய்யப்படாத தனிநபர்களின் அமைப்புகளைக் கூட அங்கீகரிக்கிறது. நாங்கள் தனிநபர்களின் அமைப்பாக வகைப்படுத்தப்பட்டுள்ளோம், நாங்கள் ஒரு அங்கீகரிக்கப்பட்ட அமைப்பு. நாங்கள் வருமான வரி செலுத்துகிறோம். மூன்று முறை தடை செய்யப்பட்டோம், ஒவ்வொரு முறையும் நீதிமன்றங்கள் எங்கள் அமைப்பின் தடையை நீக்கின.

அரசாங்கங்களும், நீதிமன்றங்களும் எங்களை ஒரு சட்டப்பூர்வ அமைப்பாக அங்கீகரித்துள்ளன. எனவே, நாங்கள் பதிவு செய்ய வேண்டியதில்லை. பல விஷயங்கள் பதிவு செய்யப்படவில்லை, இந்து தர்மம் கூட பதிவு செய்யப்படவில்லை. ஆர்எஸ்எஸ் காவி கொடிகளை மதிக்கிறது. அதே வேளையில், இந்திய மூவர்ணக் கொடிக்கு மிகுந்த மரியாதை அளிக்கிறோம்." என்று மோகன் பகவத் கூறினார்.

இந்த மாத தொடக்கத்தில், காங்கிரஸ் தலைவர் பிரியங்க் கார்கே தனது எக்ஸ் பதிவில், "ஆர்எஸ்எஸ் உண்மையிலேயே தன்னலமின்றி தேசத்திற்கு சேவை செய்தால், வெளிப்படைத் தன்மையுடனும் சட்டப்பூர்வமாகவும் செயல்படும் லட்சக்கணக்கான அரசு சாரா நிறுவனங்களைப் போல ஏன் பதிவு செய்யக்கூடாது?. பதிவு செய்யப்படாத ஒரு அமைப்பின் தலைவர் ஏன் மேம்பட்ட பாதுகாப்பினை பெறுகிறார். அவரை பிரதமர் மற்றும் உள்துறை அமைச்சருக்கு இணையாக வைப்பது ஏன்?. ஆர்எஸ்எஸ்க்கு யார் நிதியளிக்கிறார்கள்?" என்று கேள்வி எழுப்பியிருந்தார். சமீபத்தில் காங்கிரஸ் தலைவர் மல்லிகார்ஜுன கார்கே, ஆர்எஸ்எஸ்ஸை தடை செய்ய வேண்டும் என்று தெரிவித்திருந்தார்.

## தமிழகத்துக்கு மன்னராட்சி தேவையில்லை: நயினார் நாகேந்திரன்

தருமபுரி, நவ.10-

பாஜக சார்பில் தருமபுரியில் நடந்த கிராமக் கூட்டத்தில் பங்கேற்ற மாநிலத் தலைவர் நயினார் நாகேந்திரன், பின்னர் செய்தியாளர்களுக்குப் பேட்டியளித்தார்.

அப்போது, ராஜராஜசோழன் ஆட்சிக் காலத்தில் ராஜேந்திர சோழன் அமைச்சரானார் என்று அமைச்சர் துரைமுருகன் கூறியது குறித்து செய்தியாளர்கள் கேட்டனர்.

இதற்கு பதில் அளித்த நயினார் நாகேந்திரன், "அது மன்னராட்சி, தற்போது நடப்பது மக்களாட்சி. அதிமுகவில் எம்ஜிஆருக்குப் பிறகு ஜெயலலிதா. அவருக்குப் பிறகு சாதாரண விவசாய குடும்பத்தில் பிறந்த பழனிசாமி என்ற மக்களாட்சி நிலைதான் உள்ளது. ஆனால், திமுகவில் கருணாநிதி, ஸ்டாலின், உதயநிதி ஸ்டாலின் என ஒரே குடும்பத்தினரே முதல்வர் ஆகிக் கொண்டிருந்தால் மக்களின் நிலை என்னாவது? மக்களின் பிரச்சினைகளைத் தீர்க்க மன்னராட்சி தேவையில்லை, மக்களாட்சி போதும்" என்றார்.

# எஸ்ஐஆர்க்காக வழங்கப்படும் கணக்கீட்டு படிவத்தில் குழப்பங்கள்

## முதல்வர் மு.க.ஸ்டாலின் குற்றச்சாட்டு

**சென்னை: நவ.10–**

வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தத்துக்காக வழங்கப்படும் கணக்கீட்டு படிவத்தில் ஏராளமான பிரச்சினைகளும் குழப்பங்களும் இருப்பதாக முதல்வர் மு.க. ஸ்டாலின் குற்றம் சாட்டியுள்ளார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள வீடியோவில் கூறியிருப்பதாவது: நம்முடைய தொடர் எதிர்ப்புகளையும் மீறி சிறப்பு தீவிர திருத்தப் பணிகள் தொடங்கிவிட்டன. பெரும்பாலான மக்களுக்கு சிறப்பு தீவிர திருத்தம் (எஸ்ஐஆர்) பற்றி இன்னமும் முழுதாக தெரியவில்லை.

சரியான, உண்மையான வாக்காளர் பட்டியல்தான் நியாயமான தேர்தலுக்கு அடிப்படை. எனவே, வாக்காளர் பட்டியல் திருத்தத்தை திமுக எதிர்க்கவில்லை. ஆனால், போதுமான கால அவகாசம் கொடுக்காமல் தேர்தலுக்கு சில மாதங்களே உள்ள நிலையில் இதை அவசர அவசரமாக செய்வது சரியாக இருக்காது என்பதுதான் நமது நிலைப்பாடு.

தேர்தல் ஆணையத்தோடு கூட்டு சேர்ந்து வாக்காளர் பட்டியலில் பாஜக எப்படி எல்லாம் மோசடி செய்துள்ளது என்று மக்களவை எதிர்க்கட்சித் தலைவர் ராகுல் காந்தி பத்திரிகையாளர் சந்திப்பு மூலம் விளக்கி இருக்கிறார்.

கேரள முதல்வர் பினராயி விஜயனும், மேற்கு வங்க முதல்வர் மம்தா பானர்ஜியும் கூட எஸ்ஐஆர்ஐ தீவிரமாக எதிர்க்கிறார்கள். நாமும் எஸ்ஐஆர் அறிவித்த உடனே இது சதி என உணர்ந்து எதிர்த்தோம். கூட்டணி கட்சிகளோடு கலந்து பேசினோம். அனைத்துக் கட்சிக் கூட்டம் கூட்டி தீர்மானம் நிறைவேற்றினோம். உச்ச நீதிமன்றத்தில் வழக்கு தொடுத்திருக்கிறோம். வரும் 11ம் தேதி அனைத்து மாவட்டத் தலைநகரங்களிலும் மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி சார்பில் ஆர்ப்பாட்டம் அறிவித்துள்ளோம்.

அதற்கு முன்பாக, எஸ்ஐஆர்க்காக வழங்கப்படும் கணக்கீட்டு படிவத்தில் எத்தனை பிரச்சினைகள், குழப்பங்கள் இருக்கின்றன என்பதை உங்களோடு பகிர்ந்து கொள்ள விரும்புகிறேன். எனக்கும் கணக்கீட்டு படிவம் கொடுத்திருக்கிறார்கள். உங்களில் சிலரிடமும் இந்த படிவம் இந்நேரம் வந்து சேர்ந்திருக்கும்.

இதில் முதலில் நமது விவரங்களைக் கேட்கிறார்கள். அடுத்தாக, முந்தைய வாக்காளர் திருத்தப் பட்டியலில் உள்ள வாக்காளரின் உறவினரின் பெயர் கேட்கப்பட்டிருக்கிறது. உறவினர் என்றால் யார் என்பது பற்றி குறிப்பிடப்படவில்லை. அப்பாவா,



அம்மாவா, அண்ணனா, தங்கையா, கணவனா, மனைவியா, பிள்ளைகளா யார்? எல்லோரும்தானே வாக்காளர் பட்டியலில் இருப்பார்கள். இதில் ஏதாவது தெளிவு இருக்கிறதா?

வாக்காளரின் உறவினர் பெயர் என சொல்லப்பட்டுள்ள இடத்தில் முதலில் பெயரும் அடுத்ததாக வாக்காளரின் புகைப்பட அடையாள அட்டை எண்ணும் கேட்கப்பட்டுள்ளது. மூன்றாவதாக மீண்டும் உறவினர் பெயர் கேட்கப்பட்டுள்ளது. முதலில், யார் பெயரை எழுத வேண்டும்? எந்த வாக்காளர் விண்ணப்பிக்கிறாரோ அவர் பெயரா அல்லது உறவினர் பெயரா?

சிறிய தவறு இருந்தால்கூட வாக்காளர் பட்டியலில் இருந்து தேர்தல் ஆணையம் பெயரை நீக்கும் ஆபத்தும் உள்ளது. நினைத்துப் பார்க்கவே அச்சமாக உள்ளது. நன்றாகப் படித்து பெரும் பொறுப்புகளில் இருப்பவர்கள்கூட இந்த கணக்கீட்டுப் படிவத்தைப் பார்த்தால் அவர்களுக்கும் தலை சுற்றும்.

இந்த படிவித்தில் வாக்காளரின் புகைப்படத்தை அச்சிட்டு தற்போதைய புகைப்படத்தை ஒட்ட வேண்டும் என்று சொல்லப்பட்டுள்ளது. ஆனால், மாநில தேர்தல் அதிகாரி, உங்களுக்கு விருப்பம் இருந்தால் ஒட்டலாம் என்று அரசியல் கட்சிகள் பங்கேற்ற கூட்டத்தில் சொல்லி இருக்கிறார். இது மற்றுமொரு இடியாப்ப சிக்கல்.

ஒருவேளை போட்டோ ஒட்டவில்லை என்றால் என்ன நடக்கும்? வாக்குரிமை பறிக்கப்படுமா, படாதா? தொகுதியின் வாக்காளர் பதிவு அதிகாரி அதாவது இஆர்ஓ கையில்தான் இந்த முடிவு உள்ளது. இவர்கள் எல்லோரும் ஒரே மாதிரியான முடிவை எடுப்பார்கள் என்று சொல்ல முடியாது. இப்படி முதல் கோணல் முற்றிலும் கோணல் என்கிற கதையாக எல்லா இடத்திலும் குழப்பம்தான்.

இந்த நிலையில், எதிர்க்கட்சிகளைச் சேர்ந்த சில அதிமேதாவிகள், இந்த எஸ்ஐஆர் பணிகளை நடைமுறைப்படுத்துவது மாநில அரசின் பணியாளர்கள்தான் எனும்போது ஏன் திமுக எதிர்க்க வேண்டும் என்ற புரிதலற்ற உண்மைக்குப் புறம்பான விவரங்களை வைத்துப் பேசுகிறார்கள். ஒரு பணியாளரை தேர்தல் ஆணையம் தனது பணிக்காக எடுத்த நொடியில் இருந்தே அவர் தேர்தல் ஆணையத்துக்கு கட்டுப்பட்டுத்தான் செயல்படுவாரே ஒழிய, மாநில அரசின் கட்டுப்பாட்டில் இருக்க மாட்டார்.

மக்களை திசை திருப்பினால் போதும் என தவறான தகவலை பரப்பக்கூடாது. எதையாவது பொய் சொல்லி எப்படியாவது எஸ்ஐஆர்ஐ நடத்திடலாமா, ஏழை எளிய மக்களின் வாக்குரிமையை நீக்கிடலாமா என்று எதிர்க்கட்சிகள் நினைப்பது வேதனைக்குரியது.

எஸ்ஐஆர் தொடங்கிய நாளில் இருந்து களத்தில் இருக்கும் திமுகவினரும் நிறைய பிரச்சினைகளை நமது கவனத்துக்கு கொண்டு வருகிறார்கள். பிஎல்ஓக்கள் வருவதில்லை, வந்தாலும் போதுமான எண்ணிக்கையில் கணக்கீட்டுப் படிவங்களைக் கொண்டு வருவதில்லை, நாள் ஒன்றுக்கு 30 படிவங்களுக்கு மேல் தருவதில்லை.

இந்த லட்சணத்தில் ஒரு தொகுதியின் இஆர்ஓ 3 லட்சத்துக்கும் மேற்பட்ட கணக்கீட்டுப் படிவங்களை இத்தனை குறுகிய கால அவகாசத்தில் எப்படி கொடுத்து வாங்குவார்கள்? வாங்கிவிட்டால் வேலை முடிந்ததா? அதுவும் இல்லை. அதை கணிணி மயமாக்கி வரும் டிசம்பர் 7ம் தேதி வரைவு வாக்காளர் பட்டியலை வெளியிட வேண்டும். போகிற போக்கைப் பார்த்தால் எப்படி இதையெல்லாம் செய்து முடிக்கப் போகிறார்கள் என்று தோன்றுகிறது.

திமுகவும், கூட்டணி கட்சிகளும் தொடர்ந்து சொல்வது போல அதிக எண்ணிக்கையிலான வாக்காளர்கள் நீக்கப்படுவார்கள் என்ற அச்சம் இதன்மூலம் உறுதியாகிறது. பிஎல்ஓக்கள் தங்கள் பணிகளை சரிவர செய்யவில்லை என்றால் இந்த எஸ்ஐஆர் பணியே மொத்தமாக பாதிப்பை சந்திக்கும். பிஎல்ஓக்களும் கட்சியின் பிஎல்ஓ2க்களும் இணைந்து செயல்பட தேவையான அனைத்தையும் செய்வோம் என தேர்தல் ஆணையம் கூறியது. ஆனால், அதற்கான ஒரு சூழலை அவர்கள் இதுவரை உருவாக்கவில்லை. திமுக பிஎல்ஓ2 தயாராக இருந்தாலும்கூட பல இடங்களல் பிஎல்ஓக்கள் வராமல் இருக்கிறார்கள்.

இதையெல்லம் மீறித்தான் நமது செயல்வீரர்கள் விழிப்பாக செயல்பட்டு வருகிறார்கள். உங்கள் வாக்கு நீக்கப்படுமா என்று கேட்டால், அப்படி ஒரு அபாயம் நிச்சயம் இருக்கிறது. இல்லை என்று சொல்லிட முடியாது. அதை தடுக்க வேண்டும் என்றால் உங்கள் பகுதிக்குரிய பிஎல்ஓ யார் என்று கேட்டு அவரிடம் இருந்து கணக்கீட்டுப் படிவத்தை வாங்கி சரியாக நிரப்பி திரும்ப சமர்ப்பிக்க வேண்டும். அதற்கான ஒப்புகைச் சீட்டையும் மறக்காமல் வாங்க வேண்டும். இதுதான் உங்கள் வாக்குரிமையை பாதுகாக்கும்.

வாக்குரிமைதான் ஜனநாயகத்தின் அடிப்படையான மறுக்க முடியாத உரிமை. தற்போதைய நிலையில் எஸ்ஐஆர்ல் ஒட்டுமொத்த தமிழ்நாட்டு மக்களின் வாக்குரிமைக்கும் பாதிப்பு ஏற்பட்டுள்ளது. இதை எதிர்கொள்ள திமுக சார்பில் உதவி மையம் அமைத்துள்ளோம். இது திமுகவினருக்கு மட்டும் அமைத்திருக்கும் உதவி மையம் அல்ல. எல்லோருக்குமானது.

எனவே, திமுக நிர்வாகிகள் மட்டுமல்லாமல், எஸ்ஐஆர்ல் பாதிக்கப்படக்கூடிய அனைத்து பொதுமக்களும் நாங்கள் அறிவித்திருக்கக்கூடிய 08065420020 என்ற உதவி எண்ணை தொடர்பு கொண்டு உங்கள் சந்தேகத்தை தீர்த்துக்கொள்ளலாம். உங்களுக்கு தேவையான வழிகாட்டுதல்களைப் பெறலாம்.

தமிழ்நாட்டு மக்களின் வாக்குரிமையைக் காக்க திமுக உங்கள் தோழனாக துணை நிற்க தயாராக இருக்கிறது. நமது வாக்குரிமையை பறிக்கக்கூடிய ஆபத்து நமது வாசல் தேடி வந்துவிட்டது. அனைவரும் ஒன்றிணைந்து செயல்பட்டு விழிப்போடு இருந்து தமிழ்நாட்டில் ஜனநாயகம் படுகொலை செய்யப்படாமல் பாதுகாப்போம். நமது வாக்குரிமையை நிலைநாட்டுவோம். இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

## "இதுல தான் ஸ்பெஷலிட்ஸ்ட்டே".. தொலைந்த செல்போன்களை மீட்பதில் மாஸ் காட்டும் மதுரை காவல்துறை

மதுரை, நவ.10-

தொலைந்து போன செல்போன்களை கண்டுபிடித்து தருவதில் மதுரை மாவட்ட காவல்துறை முதலிடம் பெற்றுள்ளது. தமிழகத்தில் CEIR தளத்தின் மூலம் பொதுமக்களின் புகார்களை விரைவாக பதிவு செய்து, தொலைந்த மொபைல் சாதனங்களை மீட்டுத் தருவதில் மாநில அளவில் மதுரை மாவட்டம் முதல் இடத்தைப் பிடித்துள்ளது.

இதுகுறித்து மதுரை மாவட்ட காவல்துறை வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில், "மதுரை மாவட்ட காவல்துறை மக்களின் பாதுகாப்பு, சட்டம் ஒழுங்கு மற்றும் தொழில்நுட்பம் சார்ந்த சேவைகளில் மாநிலத்திலேயே முன்னிலையில் இருந்து சிறப்பாக செயல்பட்டு வருகிறது. மக்களிடம் ஏற்பட்ட நம்பிக்கையை



வலுப்படுத்தும் வகையில் தொலைந்து போன மொபைல் சாதனங்களை துரிதமாக மீட்கும் நடவடிக்கைகளில் மதுரை மாவட்ட காவல்துறை குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தை பெற்றுள்ளது.

இந்த சிறப்பிற்கு காரணம் CEIR - Central Equipment Identity Register (மத்திய சாதன அடையாளப் பதிவேடு). சிணிமிஸி என்பது தொலைபேசி திருட்டு அல்லது தொலைந்துபோன மொபைல் சாதனங்களை அடையாளம் காணவும், அவற்றின் சேவைகளை முடக்கவும் பயன்படும் மத்திய தரவுத்தள அமைப்பு ஆகும். இது இந்திய அரசின் தொலைதொடர்பு துறையால் தொடங்கப்பட்ட ஒரு தேசிய முயற்சி ஆகும். இந்த CEIR தளம் IMEI (International Mobile Equipment Identity) எண்ணை அடிப்படையாக கொண்டு செயல்படுகிறது. இதன் மூலம் தொலைந்த அல்லது திருடப்பட்ட மொபைல் சாதனங்களை உடனடியாக முடக்கலாம். சாதனம் மீண்டும் கிடைத்தால் சேவையை மீண்டும் செயல்படுத்தலாம். போலியான IMEI எண்களை கொண்ட சாதனங்களை அடையாளம் காணலாம். தமிழகத்தில் இந்த CEIR தளத்தின் மூலம் பொதுமக்களின் புகார்களை விரைவாக பதிவு செய்து, தொலைந்த மொபைல் சாதனங்களை மீட்டுத் தருவதில் மாநில அளவில் மதுரை மாவட்டம் முதல் இடத்தையும், காவல் நிலையம் வாரியாக உசிலம்பட்டி காவல் நிலையம் மூன்றாவது இடத்தையும் பெற்றுள்ளன.

இதற்காக இந்திய அரசின் தொலைதொடர்பு துறை சார்பில் வழங்கப்படும் DOT-CEIR சிறந்த செயல்பாட்டுக்கான இந்த விருதை தமிழக அரசின் காவல்துறை கூடுதல் இயக்குநர் (ADGP Cyber Crime) சந்தீப் மிட்டல் வழங்கி பாராட்டினார். இந்த அங்கீகாரம், மதுரை மாவட்ட காவல்துறை தமது தொழில்நுட்ப நுண்ணறிவு, மக்களுடன் கொண்டுள்ள நெருக்கம் மற்றும் துரிதமான காவல் நடவடிக்கைகளுக்கான சிறந்த எடுத்துக் காட்டாகும்'' என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. இது தொடர்பாக மதுரை மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அரவிந்த் கூறுகையில், "இதுபோன்ற தொழில்நுட்ப அடிப்படையிலான சேவைகளை மேலும் வலுப்படுத்தி மக்களுக்கு பாதுகாப்பான மற்றும் நம்பகமான சேவைகள் தொடர்நது வழங்கப்படும்" என்று தெரிவித்துள்ளார்.

# பிஹார் மக்கள் 2ம் கட்ட தேர்தலிலும் மாற்றத்திற்காகவே வாக்களிப்பார்கள்: தேஜஸ்வி யாதவ்



பாட்னா, நவ.10-

"பிஹார் மக்கள் முதல் கட்ட தேர்தலில் மாற்றத்திற்காக வாக்களித்துள்ளனர், நவம்பர் 11 ஆம் தேதி இரண்டாம் கட்ட தேர்தலிலும் அவர்கள் அதையே செய்வார்கள்" என்று மகா கூட்டணியின் முதல்வர் வேட்பாளர் தேஜஸ்வி யாதவ் தெரிவித்துள்ளார்.

இன்று செய்தியாளர்களிடம் பேசிய தேஜஸ்வி யாதவ், "இன்று தேர்தல் பிரச்சாரத்தின் கடைசி நாள். சூழல் மிகவும் நன்றாக இருக்கிறது. பிஹார் மக்கள் மாற்றத்திற்காக வாக்களித்துள்ளனர், நவம்பர் 11 ஆம் தேதியும் அவர்கள் அதையே செய்வார்கள். பிரதமராக இருந்தாலும் சரி, வேறு எந்த அமைச்சராக இருந்தாலும் சரி, எங்கள் அரசாங்கம் 17 மாதங்களாக வழங்கிய இடஒதுக்கீட்டைப் பற்றி யாரும் பேசவில்லை. மக்களின் 65% இடஒதுக்கீட்டை பிரதமர் தின்றுவிட்டார். அவர்கள் பிஹாருக்கு என்ன கொடுத்தார்கள், குஜராத்துக்கு என்ன கொடுத்தார்கள் என்பது பற்றி பேச வேண்டும்" என்று கூறினார்.

இதற்கிடையில், ராஷ்ட்ரிய ஜனதா தள ஆதரவாளர்கள் தேஜஸ்வி யாதவின் பிறந்தநாளை முன்னிட்டு பாட்னாவில் உள்ள அவரது வீட்டிற்கு வெளியே ஆடி, பாடி மகிழ்ச்சியை வெளிப்படுத்தினர். 'பிஹார் முதல்வர் தேஜஸ்வி யாதவ்' என்ற சுவரொட்டிகளும் அவரது வீட்டிற்கு வெளியே ஒட்டப்பட்டிருந்தன.

சமஸ்திபூர் மாவட்டத்தின் சரைரஞ்சன் சட்டமன்றத் தொகுதியில் உள்ள கே.எஸ்.ஆர் கல்லூரி அருகே சிதறிக்கிடந்த விவிபாட் சீட்டுகள் தொடர்பாக ராஷ்ட்ரிய ஜனதா தளம், இந்திய தேர்தல் ஆணையத்தை குற்றம்சாட்டியது. அக்கட்சியின் எக்ஸ் பதிவில், "சமஸ்திபூரின் சரைரஞ்சன் சட்டமன்றத் தொகுதியில் உள்ள கேஎஸ்ஆர் கல்லூரி அருகே சாலையில் ஏராளமான விவிபாட் சீட்டுகள் சிதறிக் கிடந்தன. எப்போது, எப்படி, ஏன், யாருடைய உத்தரவின் பேரில் இந்த சீட்டுகள் தூக்கி எறியப்பட்டன? திருடர்கள் ஆணையம் இதற்கு பதிலளிக்குமா? வெளியில் இருந்து வந்து பிஹாரில் முகாமிட்டிருக்கும் ஜனநாயகக் கொள்ளையர்களின் அறிவுறுத்தலின் பேரில் இவை அனைத்தும் நடக்கிறதா?" என்று கேள்வி எழுப்பியது.

பிஹார் சட்டப்பேரவைக்கான முதல் கட்ட தேர்தல் நவம்பர் 6ல் நடைபெற்றது, அப்போது வாக்குப்பதிவு 65.08 சதவீதமாக இருந்தது. இரண்டாம் கட்ட தேர்தல் நவம்பர் 11 ஆம் தேதி நடைபெறவுள்ளது, அதன் முடிவுகள் நவம்பர் 14 ஆம் தேதி அறிவிக்கப்படும்.





# தமிழ்நாடு அறிவியல் இயக்கத்தின் சார்பாக சிவகங்கை மாவட்ட குழந்தைகள் அறிவியல் மாநாடு

சிவகங்கை, நவ.10-

சிவகங்கை மாவட்டத்தில் தமிழ்நாடு அறிவியல் இயக்கத்தின் சார்பாக 34 ஆவது குழந்தைகள் அறிவியல் மாநாடு பாபா அமீர் பாதுஷா மெட்ரிக் மேல்நிலைப் பள்ளி வளாகத்திலுள்ள கூட்டரங்கில் நடைபெற்றது. தமிழ்நாடு அறிவியல் இயக்க மாவட்டத் தலைவர் முனைவர் கோபிநாத் தலைமை வகித்தார். மாவட்டத் துணைத் தலைவர் பள்ளியின் தாளாளர் பாபா அமீர் பாதுஷா முன்னிலை வகித்தனர். தமிழ்நாடு அறிவியல் இயக்க சிவகங்கை மாவட்டச் செயலாளர் ஆரோக்கியசாமி வரவேற்புரை ஆற்றினார். மாவட்ட கௌரவத் தலைவர் சாஸ்தா சுந்தரம் அறிமுக உரையாற்றினார். திருப்பத்தூர் பேரூராட்சி தலைவி கோகிலாராணி நாராயணன் மாநாட்டை துவக்கி வைத்து பேருரையாற்றினார்.





சிறப்பு அழைப்பாளர்களாக குழந்தைகள் அறிவியல் மாநாட்டின் மாநில ஒருங்கிணைப்பாளர் தியாகராஜன் தெற்கு மண்டல ஒருங்கிணைப்பாளர் பாலமுருகன் மாநில செயலாளர் முத்துலட்சுமி கலந்து கொண்டனர். நீடித்த பாதுகாப்புக்கான நீர் மேலாண்மை என்ற கருப்பொருளில் இளநிலை தமிழ் பிரிவில் 8 ஆய்வுக் கட்டுரைகள் இளநிலை ஆங்கிலப் பிரிவில் 10ஆய்வுக் கட்டுரைகள் முதுநிலை இளநிலை பிரிவில் 23 ஆய்வுக் கட்டுரைகள் முதுநிலை ஆங்கிலப் பிரிவில் 20ஆய்வுக் கட்டுரைகள் என 62 ஆய்வுக் கட்டுரைகள் சமர்ப்பிக்கப்பட்டன. பேராசிரியர்கள் முனைவர் இளையராஜா முனைவர் பரமசிவகணேஷ் முனைவர் இராமசந்திரன் முனைவர் விஜய ஆனந்த் முனைவர் ஜெனீஸ் முனைவர் விக்னேஸ்வரி முனைவர் கற்பூரரஞ்சித் முனைவர் அழகம்மாள் ஸ்ரீபதி மதிப்பீட்டா ளர்களாக செயல்பட்டு 10 படைப்புகளை தேர்ந்தெடுத்தனர். குழந்தைகள் அறிவியல் மாநாட்டின் மாவட்டக் கல்வி ஒருங்கிணைப்பாளர் முனைவர் இளையராஜா நவம்பர் 23ஆம் தேதி சிவகங்கையில் நடைபெறவிருக்கும் மண்டல மாநாட்டிற்கு தேர்ந்தெடுக்கப்பட்ட ஆய்வு கட்டுரைகளை அறிவித்தார். குழந்தை விஞ்ஞானிகளுக்கு கேடயமும் சான்றிதழ்களும் பதக்கங்களும் வழங்கி சிறப்புரையாற்றினார். கலந்துகொண்ட அனைவருக்கும் சான்றிதழ்களும் புத்தகங்களும் பரிசாக வழங்கினார். பொன்னமராவதி லயன்ஸ் சைன் பொருளாளர் கணேசன் ஷண்முகா சிட்டி சென்டர் உரிமையாளர் சண்முகநாதன் சிவில் ஆலோசகர் அபுதாஹிர் சிவகங்கை கிளைத் தலைவர் மணவாளன் மாவட்டத் துணை தலைவர் ஆரோக்கியமேரி மாவட்ட துணைத் தலைவர் காளிராசா வாழ்த்துரை வழங்கினார்கள். தமிழ்நாடு அறிவியல் இயக்க மாவட்டப் பொருளாளர் பிரபு நன்றி கூறினார். பாபா அமீர் பாதுஷா மெட்ரிக் மேல்நிலைப்பள்ளி ஆசிரியை மெகர்பானு நிகழ்ச்சிகளை ஒருங்கிணைத்தார். பள்ளியின் ஆசிரியைகள் ஆய்வு கட்டுரை பதிவுகளை மேற்கொண்டனர். வழிகாட்டி ஆசிரியர்களும் பெற்றோர்களும் திரளாக கலந்து கொண்டு மாநாட்டை சிறப்பித்தார்கள்.

# முகவரி மாறி வசிப்பவர்கள் கவலைப் படத் தேவையில்லை: தேர்தல் ஆணைய அதிகாரிகள் விளக்கம்

தமிழகத்தில் கடந்த நவம்பர் 4ம் தேதி சிறப்பு தீவிர வாக்காளர் பட்டியல் திருத்தப் பணி (எஸ்ஐஆர்) தொடங்கியது. மாநிலம் முழுவதும் 76 பிஎல்ஓக்கள் நியமிக்கப்பட்டு, வீடு வீடாக எஸ்ஐஆர் படிவங்கள் வாக்காளர்களுக்கு விநியோகிக்கப்பட்டு வருகின்றன. தமிழகத்தில் நடைபெற்று வரும் இந்தப் பணிகளை மாவட்ட வாரியாக இந்திய தேர்தல் ஆணையத்தின் துணை தேர்தல் ஆணையர் பானு பிரகாஷ், இயக்குநர் கே.கே.திவாரி, தமிழக தலைமை தேர்தல் அதிகாரி அர்ச்சனா பட்நாயக் ஆகியோர் ஆய்வு செய்து வருகின்றனர். நேற்று திருவண்ணாமலை மாவட்டத்தில் ஆய்வு நடத்தினர்.

இந்த நிலையில், எஸ்ஐஆர் தொடர்பாக பொதுமக்களுக்கு இயல்பாக எழும் கேள்விகளுக்கு தேர்தல் ஆணைய அதிகாரிகள் விளக்கம் அளித்துள்ளனர். அது பின்வருமாறு;

நகர்ப்புறவாசிகள் பெரும்பாலும் பணிக்கு செல்பவர்கள் என்பதால், அவர்கள் வீடுகளில் இருக்க வாய்ப்பில்லை. இவர்களிடம் எஸ்ஐஆர் படிவத்தை எப்படி கொண்டு போய் சேர்க்கப் போகிறீர்கள்?

பிஎல்ஓக்களும் அரசு ஊழியர்கள் தான். அவர்களின் அலுவலக பணி முடிந்த பிறகே வாக்காளர்களை சந்திக்கச் செல்வார்கள். சனி, ஞாயிற்றுக்கிழமைகளிலும் பணியாற்றுவார்கள். அதனால் அனைவரிடமும் படிவம் கொடுப்பதில் சிக்கல் இருக்காது.

முகவரி மாறி வசிப்பவர்கள் பிஎல்ஓக்களிடம் படிவத்தை பெற முடியாத போது அவர்களின் வாக்குரிமை என்ன ஆகும்? அவர்கள் எப்போது மீண்டும் தங்கள் பெயரை வாக்காளர் பட்டியலில் சேர்க்க முடியும்?

பிஎல்ஓக்கள், அவர்களுக்கு வழங்கப்பட்ட எஸ்ஐஆர் செயலியில், சம்பந்தப்பட்ட அந்த வாக்காளர் குடிபெயர்ந்ததாக பதிவு செய்துவிடுவார்கள். அப்படி பதிவு செய்யப்பட்டவர்கள் டிசம்பர் 9ம் தேதி முதல் நடைபெறும் வரைவு வாக்காளர் பட்டியல் திருத்தப் பணியின்போது, படிவம் 6ஐ பூர்த்தி செய்து விண்ணப்பிக்கலாம். அதனால் முகவரி மாறி வசிப்பவர்கள் கவலைப்படத் தேவையில்லை.

ஒரு வாக்காளருக்கு 2 படிவம் மட்டுமே தரப்படுவதால் படிவத்தை பூர்த்தி செய்யும்போது தவறு நேர்ந்தால் என்ன செய்வது... இரண்டுக்கு மேல் படிவம் வழங்க வாய்ப்புள்ளதா?

தவறாக பூர்த்தி செய்தால், அடித்துவிட்டு திருத்தி எழுதி, அந்த வாக்காளர் தான் கையெழுத்திடுவார். அதை பிஎல்ஓ ஆய்வு செய்து ஒப்புதல் அளிப்பார். இதில் சிரமம் எதுவும் இருக்காது. இந்த படிவங்கள், அனைவருக்கும் பொதுவான படிவங்கள் இல்லை. ஒவ்வொரு வாக்காளருக்கும் தனித்தனியாக, வாக்காளர் விவரங்கள், புகைப்படங்கள் அடங்கிய படிவமாக வழங்கப்படுகிறது. அதனால் ஒவ்வொருவருக்கும் கூடுதல் படிவங்களை அச்சிடுவது சிரமம்.

சில பகுதிகளில் படிவங்களை பெட்டிக் கடைகளில் கொடுத்து விநியோகிக்கப்படுவதாக புகார்கள் வருகிறதே?

படிவங்கள் விநியோகம் தொடர்பாக அனைத்து மாவட்ட ஆட்சியர்களுக்கும் கண்டிப்பான வழிகாட்டு நெறிமுறைகள் வழங்கப்பட்டுள்ளன. படிவங்களை வீடு வீடாகத் தான் சென்று வழங்க வேண்டும். இதை மீறும் பிஎல்ஓக்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும்.

சில இடங்களில் அரசு ஊழியர்கள் அல்லாதோரும் பிஎல்ஓக்களாக நியமிக்கப்பட்டு இருப்பதாக குற்றம்சாட்டப்படுகிறதே?

அரசு ஊழியர்களை மட்டும் தான் பிஎல்ஓக்களாக நியமிக்க வேண்டும் என்று அனைத்து மாவட்ட தேர்தல் அலுவலர்களுக்கும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

படிவம் கிடைக்கா தவர்கள் என்ன செய்ய வேண்டும்?

குறிப்பிட்ட முகவரியில் வசிப்பவர்கள், அதே முகவரியில் வாக்காளர் அட்டை பெற்றிருந்தால் கட்டாயம் படிவம் வீடு தேடி வந்து சேரும். பிஎல்ஓ படிவத்தை கொடுக்காமல் இருந்தால், தொடர்புடைய வாக்காளர் பதிவு அலுவலர் பிரத்யேக செயலியின் டேஷ் போர்டில் பார்க்க முடியும். எதற்காக படிவம் இன்னும் சென்று சேரவில்லை என பிஎல்ஓக்களிடம் கேள்வி எழுப்ப முடியும். பிஎல்ஓக்கள் படிவத்தை வழங்காமல் இருந்தால், அதற்கான காரணத்தை இறப்பு, குடிபெயர்தல் அல்லது ஆப்சென்ட் என எஸ்ஐஆர் செயலியில் குறிப்பிட வேண்டியது கட்டாயம்.

படிவத்தில் ஆதார் எண் குறிப்பிடுவது கட்டாயமா?

கட்டாயம் இல்லை. அது வாக்காளர்களின் விருப்பம்.

தாய், தந்தை இருவரும் இறந்துவிட்டால், அவர்களின் வாக்காளர் அடையாள அட்டை எண் வைத்திருக்காத நிலையில் என்ன செய்வது... அந்த எண்களை வழங்க வேண்டியது கட்டாயமா?

சம்பந்தப்பட்ட வாக்காளருக் கே, 2002 காலகட்டத்தில் வாக்குரிமை இருந்திருந்தால், அதன் விவரங்களை கொடுத்தால் போதும். அவர்களுக்கு வாக்குரிமை அப்போது இல்லாமல் இருந்தால் மட்டுமே பெற்றோரின் அப்போதைய விவரங்களை இப்போது கொடுக்க வேண்டும்.

2002, 2005ம் ஆண்டுகளில் வாக்குரிமை பெற்று, அதன் விவரங்கள் இல்லாதவர்கள் என்ன செய்ய வேண்டும்?

2002 காலகட்ட வாக்காளர் பட்டியல் தற்போது இணையத்தில் உள்ளது. அதைப் பார்த்து படிவத்தை பூர்த்தி செய்யலாம். அதற்கு பிஎல்ஓக்கள் உதவுவார்கள்.

2024ம் ஆண்டு வாக்காளர் பட்டியலில் பெயர் இல்லை. தற்போது பெயரைச் சேர்க்க முடியுமா?

வரும் டிசம்பர் 9ம் தேதி முதல் நடைபெறும் வரைவு வாக்காளர் பட்டியல் திருத்தப் பணியின்போது, படிவம் 6ஐ கொடுத்து பெயரைச் சேர்க்கலாம்.

படிவங்களை பூர்த்தி செய்ய பிஎல்ஓ உதவா விட்டால் என்ன செய்ய வேண்டும்?

நிச்சயமாக உதவுவார்கள். அப்படி உதவாவிட்டால் 1950 என்ற எண்ணில் தொடர்பு கொண்டு புகார் தெரிவிக்கலாம். வாக்காளர் பதிவு அலுவலரை தொடர்பு கொள்வதற்கான எண்கள், முகவரிகள் வெளியிடப்பட்டுள்ளன. அங்கும் புகார் அளிக்கலாம்.

இந்த படிவங்களை ஆன்லைனில் விண்ணப்பிக்கும் வசதி உள்ளதா?

ஆன்லைனில் விண்ணப்பிக்கும் வசதி கொண்டுவரப்பட்டுள்ளது. ஆனால், அது ஆதார் அடிப்படையில் ஓடிபி பெற்று செயல்படும் என்பதால், ஆதார் அட்டையிலும், வாக்காளர் அட்டையிலும் பெயர் ஒரே மாதிரி இடம் பெற்றிருப்பது அவசியம். குறிப்பிட்ட முகவரியில் வசிக்காமல் ஆன்லைனில் விண்ணப்பித்தால், தொடர்புடைய பிஎல்ஓ அந்த படிவத்துக்கு ஒப்புதல் அளிக்க மாட்டார்.

தந்தை, மகன் வெளிநாட்டில் வேலை செய்யும்போது அவர்கள் எப்படி படிவத்தை பூர்த்தி செய்ய முடியும்... அப்போது அவர்களின் பெயர் பட்டியலில் இருந்து நீக்கப்படுமா?

அதே முகவரியில் குடும்பத்தினர் யாராவது வசித்து வந்தால், அந்த வாக்காளர்களின் சார்பில் படிவத்தை பூர்த்தி செய்து, கையெழுத்திட்டு வழங்கலாம்.

# தாம்பரம் ரயில் நிலையத்தில் மின்தூக்கி, கழிவறை வசதி இல்லாததால் அவதி







சென்னை, நவ.10-

சென்னையில் உள்ள முக்கியமான ரயில் நிலையமாக தாம்பரம் ரயில் நிலையம் உள்ளது. தாம்பரத் தில் 3வது ரயில் முனையம் அமைக்கப்பட்டு, கடந்த 2018ம் ஆண்டு முதல் செயல்பட்டு வருகிறது.

சென்னை கடற்கரை தாம்பரம் வரை தினசரி 220க்கும் மேற்பட்ட மின்சார ரயில்களும், தாம்பரம் ரயில் நிலை யம் வழியாக செங்கல்பட்டு, திருமால் பூர் உள்பட புறநகர்களுக்கு 10க்கும் மேற்பட்ட மின்சார ரயில்களும் இயக்கப்படுகின்றன. இதுதவிர, எழும்பூரில் இருந்து மத்திய, தென் மாவட்டங் களுக்கு தினசரி 30க்கும் மேற்பட்ட விரைவு ரயில்கள் தினசரி தாம்பரம் வழியாக இயக்கப்படுகின்றன.

தாம்பரத்தில் இருந்து தென் மாவட்டங்களுக்கும், வடமாநிலங்களுக்கும் தலா 10க்கும் மேற்பட்ட சிறப்பு ரயில்களும் இயக்கப்படுகின்றன. இதனால், இங்கு வந்து செல்லும் தினசரி பயணிகளின் எண்ணிக்கை 2.30 லட்சத்தை தாண்டியுள்ளது. மேலும், இந்தநிலையம் 2024 25ம் ஆண்டில் மட்டும் ரூ.276 கோடி வருவாய் ஈட்டியுள்ளது. இருப்பினும், இந்த நிலையத்தில் பயணிகளுக்கான அடிப்படை வசதிகள் போதிய அளவில் செய்யப்படவில்லை என்ற குற்றச்சாட்டு எழுந்துள்ளது.

எழும்பூரில் இருந்து தென் மாவட்டங்களுக்கு புறப்படும் நெல்லை, முத்துநகர், கன்னியாகுமரி, பாண்டியன் உள்ளிட்ட விரைவு ரயில்கள் தாம்பரம் ரயில் நிலையத்தில் 7,8வது நடை மேடைகள் வழியாக இயக்கப்படுகின்றன. இந்த நடைமேடைகளில் நகரும் படிக்கட்டுகள் மற்றும் மின்தூக்கி வசதி இல்லை.

இதுதவிர, 5, 6வது நடைமேடைகளிலும் நகரும் படிக்கட்டுகள், மின்தூக்கி வசதிகள் இல்லை. இதனால், விரைவு ரயில்களில் ஏறுவதற்காக இங்கு வரும் பயணிகள் கடும் அவதிப்படுகின்றனர். குறிப்பாக, வயதானவர்கள், மாற்றுத் திறனாளி பயணிகள் இன்னல்களுக்கு ஆளாகி வருகின்றனர்.

இதுதவிர, நடைமேடை களில் குடிநீர், கழிப்பறை என எந்த அடிப்படை வசதியும் இல்லை. 6,7,8 வது நடைமேடைக்கு செல்ல பேட்டரி கார் வசதி உள்ளது. ஆனால், இதற்கு கட்டணம் வசூலிக்கப்படுவதால், ஏழை மக்கள், மாற்றுத்திறனாளி பயணிகள் பயன்படுத்த முடியாத நிலை இருக்கிறது.

இது குறித்து, சென்னை, சிட்லப்பாக்கத்தைச் சேர்ந்த சமூக ஆர்வலர் தயானந்த் கிருஷ்ணன் கூறியதாவது: கடந்த 2024 25 ஆண்டில் மட்டும் 3.4 கோடி பயணிகள் தாம்பரம் ரயில் நிலையத்தை பயன்படுத்தியுள்ளனர். ஆனால், இந்த ரயில் நிலையத்தில் போதிய வசதிகள் எதுவுமே இல்லை. 5 முதல் 10 வரை உள்ள நடைமேடைகளில் நகரும் படிக்கட்டுகள் மற்றும் மின்தூக்கி வசதிகள் இல்லை. ஓய்வு அறை, குடிநீர் வசதி, கழிவறை வசதி, சக்கர நாற்காலி வசதி என எதுவும் போதிய அளவு இல்லை.

தாம்பரம் ரயில் நிலையத்தை மறுசீரமைப்பு செய்வது தொடர்வாக விரிவான திட்ட அறிக்கை தயாரிக்க, 2020ம் ஆண்டு ஒப்பந்தம் கொடுக்கப்பட்டது. அப்போது, ரூ.1,000 கோடியில் திட்ட மதிப்பீடு தயார் செய்யப்பட்டது. இருப்பினும், தற்போது வரை விரிவான திட்ட அறிக்கையை ரயில்வே வாரியத்துக்கு அனுப்பவில்லை. தாம்பரம் ரயில் நிலைத்தில் பயணிக ளுக்கான அனைத்து வசதிகளையும் ஏற்படுத்தி கொடுக்க வேண்டும். இவ்வாறு அவர் கூறினார்.

இது குறித்து, ரயில்வே அதிகாரிகளிடம் கேட்டபோது,"தாம்பரம் ரயில் நிலையத்தில் பயணிகளுக்கான வசதிகளை தொடர்ந்து செய்து வருகிறோம். பார்க்கிங் வசதி நிலை யத்தின் இருபுறமும் அமைத்து கொடுத்து உள்ளோம். நகரும் படிக்க ட்டுகள் பொருத்தவரை தேவையான நடைமே டைகளில் படிப்படியாக ஏற்படுத்தப்படும்.மறுசீரமைப்பு பணி தொடங்கும்போது, அனைத்து வசதிகளும் செய்து கொடுக்கப்படும்" என்றனர்.

# கேரளாவில் ஆவியை விரட்டுவதாக கூறி பெண்ணுக்கு சாராயம் கொடுத்து சித்ரவதை

## மந்திரவாதி உட்பட 3 பேர் கைது

கோட்டயம், நவ.10-

உடலில் புகுந்த ஆவியை விரட்டுவதாக கூறி பெண்ணுக்கு சாராயம் கொடுத்து சித்ரவதை செய்த மந்திரவாதி உட்பட 3 பேர் கைது செய்யப்பட்டனர்.

கேரள மாநிலம் கோட்டயம் மாவட்டத்தைச் சேர்ந்த ஒரு பெண்ணுக்கு கடந்த வாரம் உடல்நலக்குறைவு ஏற்பட்டது. இதையடுத்து அந்தப் பெண்ணின் கணவன் வீட்டார் பெண்ணுக்கு பேய் பிடித்து விட்டது என்று கூறி ஆவியை விரட்டுவதற்காக மந்திரவாதி சிவதாஸ் (54) என்பவரை அழைத்து வந்தனர்.

காலையில் வந்த மந்திரவாதி சிவதாஸ் பூஜையில் இறங்கியுள்ளார். மேலும் அந்தப் பெண்ணுக்கு சாராயம் கொடுத்து குடிக்குமாறு சித்ரவதை செய்துள்ளனர். மேலும் பீடியும் புகைக்க வேண்டும் என்று கூறி காலையில் தொடங்கி நள்ளிரவு வரை பூஜை நடத்தியுள்ளனர். அந்தப் பெண்ணுக்கு உடலில் சூடு வைத்து மந்திரவாதி துன்புறுத்தியுள்ளதாகத் தெரிகிறது.

கட்டாயப்படுத்தி சாராயத்தை குடிக்க வைத்ததால் அந்தப் பெண் மயங்கி விழுந்தார். இந்த விவரம் அறிந்ததும், அந்தப் பெண்ணின் தந்தை கோட்டயம் போலீஸில் புகார் கொடுத்தார். விரைந்து வந்த போலீஸார் விசாரணை நடத்தினர். அதற்குள் மந்திரவாதி சிவதாஸ் தப்பியோடிவிட்டார்.

போலீஸார் தீவிர தேடுதல் வேட்டை நடத்தி திருவள்ளா பகுதியில் அவரைக் கைது செய்தனர். அவருடன், அந்தப் பெண்ணின் கணவர் அகில் தாஸ் (26), அகில் தாஸின் தந்தை தாஸ் (54) ஆகியோரும் கைது செய்யப்பட்டுள்ளனர். அவர்கள் மீது வழக்குப் பதிவு செய்து விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

## யாரெல்லாம் வெள்ளிக்கிழமையில் முருகனை வணங்கினால் வாழ்க்கையில் அற்புதம் நடக்கும் தெரியுமா?



முருகப் பெருமான், தன்னை நம்பிக்கையுடன் வேண்டும் பக்தர்களுக்கு உடனடியாக ஓடி வந்து, அருளை அள்ளி அள்ளிக் கொடுப்பார். இருந்தாலும் சில ராசிக்காரர்கள் முருகப் பெருமானை வெள்ளிக்கிழமை நாளில், சில குறிப்பிட்ட முறைகளில் வழிபட்டால் அவர்களின் வாழ்க்கையில் அற்புதமான மாற்றங்கள், நினைத்து பார்க்க முடியாத அதிசயங்கள் நடக்க வைப்பார் என்பது நம்பிக்கை.

பொதுவாக வெள்ளிக்கிழமை என்பது மங்களகரமான நாளாக கருதப்படுகிறது. இது கிரகங்களில் சுக்கிரனுக்கும், தெய்வங்களில் மகாலட்சுமிக்கும் உரிய நாளாக கருதப்படுகிறது. வெள்ளிக்கிழமையில் செல்வங்களுக்கு அதிபதியான மகாலட்சுமியை வழிபட்டால் செல்வம் சேரும், மங்களகரமான வாழ்க்கை அமையும் என்பது தான் பெரும்பாலானவர்களின் நம்பிக்கையாக உள்ளது. வெள்ளிக்கிழமை வழிபாடு சக்தி வாய்ந்ததாகும். ஆனால் வெள்ளிக்கிழமை என்பது அன்பும், அருளும் சேர்ந்த ஒரு சக்திகரமான நாளாகும்.

மகாலட்சுமிக்கு விளக்கேற்றுதல், விரதம் இருத்தல், கோ பூஜை செய்தல் போன்ற வழிபாடுகள் செல்வச் செழிப்புக்காகவும், மன நிம்மதிக்காகவும் செய்யப்படுகின்றன. அதே போல் வெள்ளிக்கிழமை ராகு கால நேரத்தில் துர்கைக்கு விளக்கு ஏற்றி வழிபட்டால் குடும்பத்தில் உள்ள கஷ்டங்கள் அனைத்தும் தீரும். குலதெய்வத்தை வழிபடவும் வெள்ளிக்கிழமை ஏற்ற நாளாக கருதப்படுகிறது. ஆனால் பலருக்கும் தெரியாத ஒரு விஷயம் என்னவென்றால், வெள்ளிக்கிழமையில் முருகப் பெருமானை வழிபட்டால் தெய்வீக அருள் கிடைப்பதுடன், வெற்றிகளும் குவியும். அதுவும் வெள்ளிக்கிழமையில் குறிப்பிட்ட நான்கு ராசிக்காரர்கள் முருகப் பெருமானை அவர்களின் ராசிக்குரிய வழிமுறையில் வழிபட்டால் வாழ்க்கையில் அற்புதங்கள் நடக்கும்.

வெள்ளிக்கிழமையில் முருகனை வழிபட வேண்டியவர்கள் :

1. மிதுனம் உங்களின் ராசி அதிபதியான புதனுடன் நட்பு கொண்டவர் முருகப் பெருமான். வெள்ளிக்கிழமையில் காலை வேளையில் முருகப் பெருமானுக்கு பால் அபிஷேகம் செய்து, "ஓம் சரவண பவ" மந்திரத்தை 108 சொல்லி வழிபட வேண்டும். இதனால் மன அழுத்தம் குறையும். புதிய வாய்ப்புகள், மகிழ்ச்சி, புதிய மாற்றங்கள் வரும்.

2. கன்னி கன்னி ராசிக்காரர்கள் வெள்ளிக்கிழமையில் முருகனை வழிபட்டால் சந்தேக மனம், பயம், மனக்குழப்பம் ஆகியவை நீங்கும். வெள்ளிக்கிழமைகளில் அருணகிரிநாதர் அருளிய திருப்புகழில் இருந்து ஏதாவது ஒரு பாட்டை வாசித்தால் கூட மனம் லேசாகும். முருகப் பெருமானை மனதார நினைத்து திருப்புகழ் படிப்பதால் அடுத்த வாரமே கூட நல்ல செய்தி தேடி வரும்.

3. தனுசு தனுசு ராசிக்காரர்கள் வெள்ளிக்கிழமையில் முருகனை வழிபட்டால் அவர்களின் வெற்றிக் கதவு திறக்கும். வெள்ளிக்கிழமையில் சிவப்பு நிற மலர் அல்லது சிவப்பு நிற வஸ்திரத்தை முருகனுக்கு சாற்றி வழிபட்டால் தடைகள் அகலும். கல்வி, போட்டி தேர்வுகள், வேலை வாய்ப்பு, வளர்ச்சி ஆகியவை அமோகமாக இருக்கும்.

4. மீனம் மீனம் ராசிக்காரர்கள் வெள்ளிக்கிழமை மாலை வேளையில் முருகனின் படத்திற்கு முன் விளக்கு ஏற்றி வைத்து, குறைந்தபட்சம் ஒரு மணி நேரமாவது சரவண பவ மந்திரத்தை சொல்லுவதால் மன அமைதி, ஆன்மீக சக்தி, குடும்ப ஒற்றுமை ஆகியவை ஏற்படும்.

வெள்ளிக்கிழமையில் திருப்பரங்குன்றம் அல்லது உங்களுக்கு பிரியமான ஊர் முருகன் அல்லது உங்கள் வீட்டின் அருகில் உள்ள முருகனை மனதார வழிபடுங்க. உங்கள் வாழ்க்கையில் பல நல்ல மாற்றங்கள், அற்புதங்கள் நடப்பதை காண முடியும். அதே போல் வெள்ளிக்கிழமையில் விளக்கேற்றி, சிவப்பு நிற மலர்களை முருகனுக்கு படைத்து, பால் நைவேத்தியமாக படைத்து, ஓம் சரவண பவ மந்திரம், கந்த சஷ்டி கவசம் ஆகியவற்றை நம்பிக்கையுடன் படித்து வந்தால் முருகனின் அருள் விரைவாகக் கிடைக்கும்.

## மிக உயரமான கோபுரங்களை உடைய தென்னிந்தியாவின் டாப் 20 கோவில்கள்



கோபுர தரிசனம் கோடி புண்ணியம் என்பார்கள். கோவிலுக்குள் இருக்கும் தெய்வத்தை வழிபடுவதை விட பல மடங்கு புண்ணியத்தை தரக் கூடிய கோபுரங்களை தென்னிந்தியாவில் மிக அதிகம். அதிகமான கோபுரங்களை கொண்ட கோவில்கள் பல இருந்தாலும், உயரமான கோபுரங்களை கொண்ட பழமையான, புகழ்பெற்ற கோவில்கள் உள்ளன. இவற்றில் அதிக உயரமான கோபுரங்களை கொண்ட கோவில்கள் பற்றி தெரிந்து கொள்ளலாம்.

இந்தியா, பல லட்சக்கணக்கான கோவில்களைக் கொண்ட ஆன்மிக பூமியாக திகழ்கிறது. இவற்றுள் பல கோவில்கள் புராதன கோவில்களாகவும், புண்ணிய தலங்கள், பல பிரம்மாண்ட கோவில்களாகவும் உள்ளன. பல ஆயிரம் ஆண்டுகள் பழமையிலும், பிரம்மாண்டத்திலும் அனைவரையும் ஆச்சரியப்பட வைக்கும் கோவில்கள் தென்னிந்தியாவில் அதிகமாக உள்ளன. கோவில்களின் அடையாளமாக கருதப்படும் கோபுரங்களில் மிக உயரமான கோபுரங்களை கொண்ட கோவில்களும் தென்னிந்தியாவில் அதிகம். அப்படி தென்னிந்தியாவில் மிக உயரமான கோபுரங்களைக் கொண்ட டாப் 20 கோவில்களின் பட்டியலை தெரிந்து கொள்ளலாம்.

தென்னிந்தியாவில் 100 அடிக்கு அதிகமான உயரம் கொண்ட கோவில் கோபுரங்கள் ஏராளம் உள்ளன. இவற்றில் பெரும்பாலானவை மிகவும் புகழ்பெற்ற தலங்களாகவும், சிவன் கோவில்களும் உள்ளன. இதில் ஒரு சில வைணவ புகழ்பெற்ற மற்றும் திவ்ய தேசங்களான வைணவ தலங்களும் உள்ளன. கோவில் கோபுர உயரத்தில் மட்டுமின்றி பாவங்களை போக்கி, புண்ணியங்களை தரும் சிறப்புமிக்க முக்தி தலங்களாகவும் இவைகள் திகழ்கின்றன. வாழ்நாளில் ஒருமுறையாவது சென்று வழிபட வேண்டிய கோவில்களில் இவைகள் மிகவும் முக்கியமானவை.

தென்னிந்தியாவின் டாப் 20 உயரமான கோபுரங்களைக் கொண்ட கோவில்கள்:

1. ரங்கநாத சுவாமி கோவில், ஸ்ரீரங்கம் 239.5 அடி
2. முருதீஸ்வரர் கோவில், கர்நாடகா 237.5 அடி
3. அண்ணாமலையார் கோவில் கிழக்கு கோபுரம், திருவண்ணாமலை 216.5 அடி
4. தஞ்சை பெரிய கோவில், தஞ்சாவூர் 216 அடி
5. உலகளந்த பெருமாள் கோவில், திருக்கோவிலூர் 194 அடி
6. ஆண்டாள் கோவில், ஸ்ரீவில்லிபுத்தூர் 193.5 அடி
7. ஏகாம்பரேஸ்வரர் கோவில், காஞ்சிபுரம் 190 அடி
8. கள்ளழகர் கோவில், மதுரை 187 அடி
9. காசி விஸ்வநாதர் கோவில், தென்காசி 180 அடி
10. சாரங்கபாணி கோவில், கும்பகோணம் 173 அடி
11. அண்ணாமலையார் கோவில் வடக்கு கோபுரம், திருவண்ணாமலை 171 அடி
12. மீனாட்சி அம்மன் கோவில், மதுரை 170 அடி
13. விருபாக்ஷா கோவில், ஹம்பி, கர்நாடகா 166 அடி
14. அண்ணாமலையார் கோவில் தெற்கு கோபுரம், திருவண்ணாமலை 157 அடி
15. ராஜகோபால சுவாமி கோவில், மன்னார்குடி 154 அடி
16. லட்சுமி நரசிம்மர் கோவில், மங்களகிரி, ஆந்திரா 153 அடி
17. ரங்கநாதசுவாமி கோவில் வெள்ளை கோபுரம், ஸ்ரீரம் 145 அடி
18. சுந்தரராஜ பெருமாள் கோவில், உத்திரமேரூர் 144 அடி
19. அண்ணாமலையார் கோவில் வடக்கு கோபுரம், திருவண்ணாமலை 144 அடி
20. வரதராஜப் பெருமாள் கோவில், காஞ்சிபுரம் 130 அடி

## ஐபிஎல் சாம்பியன் ஆர்சிபி அணியை விற்க உரிமையாளர் முடிவு



கடந்த ஐபிஎல் சாம்பியன் ஆர்சிபி அணியின் உரிமையாளர் நிறுவனமான டியாஜியோ ஆர்சிபி கிரிக்கெட் அணியை விற்க முடிவு செய்துள்ளது.

இது தொடர்பாக இந்திய பங்குச் சந்தை கட்டுப்பாட்டு வாரியத்திற்கு (SEBI) டியாகியோ நிறுவனம் அளித்த அறிக்கையில், ஆர்சிபி மீது தனது முதலீட்டுக்கான தேவைப்பாடு குறித்த ஆய்வு (strategic review) நடத்தப்படுவதாக தெரிவித்துள்ளது. இந்த மதிப்பாய்வு 2026 மார்ச் 31க்குள் நிறைவடையும் என கூறப்பட்டுள்ளது.

ஆர்சிபி அணி தற்போது அதிகாரபூர்வமாக விற்பனைக்கு வந்துள்ளது. அணியின் உரிமையாளரான டியாஜியோ (Diageo) நிறுவனம், கிட்டத்தட்ட 2 பில்லியன் அமெரிக்க டாலர் மதிப்புக்கு அணியை விற்கத் திட்டமிட்டுள்ளதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

ஆர்சிபி ஆண்கள் மற்றும் மகளிர் அணிகளின் உரிமையாளரான ராயல் சாலஞ்சர்ஸ் ஸ்போர்ட்ஸ் (Royal Challengers Sports Private Limited-RCSPL), நிறுவனம் யுனைடெட் ஸ்பிரிட்ஸ் நிறுவனத்தின் முழுமையான துணை நிறுவனம். இந்நிறுவனத்தின் உரிமையாளர் டியாகியோ. இன்னும் நான்கு மாதக் காலத்திற்குள் ஆர்சிபி விற்பனையை முடிக்க அந்நிறுவனம் திட்டமிட்டுள்ளது.

“ஆர்சிபி அணி எங்களுக்கு முக்கியமான மூலதனச் சொத்தாக இருந்து வருகிறது. இருப்பினும், எங்களின் முக்கியத் தொழிலான மதுபான வர்த்தகத்துக்கு, கிரிக்கெட் வணிகம் நேரடியாக இணைந்தது அல்ல. எனவே, இந்த முதலீட்டை திரும்பப் பெறுவது குறித்த மதிப்பாய்வை மேற்கொண்டு வருகிறோம்” என்று டியாஜியோ நிறுவனம் தெரிவித்துள்ளது.

சமீப ஆண்டுகளில் டியாகியோவின் உலகளாவிய வணிகம் சவால்களை எதிர்கொண்டுள்ள நிலையில், இத்தீர்மானம் வந்துள்ளது. இதற்கு முன், 2024 ஜூன் மாதத்தில் வெளியிடப்பட்ட பங்குச் சந்தை ஒழுங்குமுறை ஆணையத்துக்கான அறிக்கையில், ஆர்சிபி அணியின் விற்பனை குறித்தச் செய்திகளை "கற்பனையானவை" என அந்நிறுவனம் மறுத்தது குறிப்பிடத்தக்கது.

ஆனால், இப்போது உலகளாவிய சந்தை அழுத்தங்கள் காரணமாக டியாகியோவின் இந்த விற்பனைப் பரிசீலனைக்கு வந்ததாகத் தெரிகிறது. மேலும் தங்கள் முதல் ஐபிஎல் கோப்பையை வென்ற பிறகு பெங்களூரு சின்னசாமி மைதானம் வெளியே ஏற்பட்ட பரிதாபகரமான நெரிசலில் பலர் பலியானதையடுத்து அணி விற்பனை குறித்த ஊகங்கள் அதிகரித்தன.

ஐபிஎல் தொடங்கிய காலத்தில் ஆர்சிபி அணி 111.6 மில்லியன் டாலர்களுக்கு விஜய் மல்லையாவால் வாங்கப்பட்டது. அவர் 2016ல் பதவி விலகியபின், டியாகியோ நிறுவனம் முழுமையான உரிமையாளராக ஆனது.

## மேற்கு வங்க கிரிக்கெட் சங்கம் சார்பில் இந்திய கிரிக்கெட் வீராங்கனை ரிச்சா கோஷுக்கு தங்க மட்டை, பந்து



ஐசிசி மகளிர் ஒருநாள் கிரிக்கெட் உலகக் கோப்பையை வென்ற இந்திய அணியில் இடம்பிடித்துள்ள மேற்கு வங்கத்தைச் சேர்ந்த வீராங்கனையான ரிச்சா கோஷுக்கு தங்க முலாம் பூசப்பட்ட பேட், பந்தை பரிசாக வழங்க அம்மாநில கிரிக்கெட் சங்கம் (சிஏபி) முடிவு செய்துள்ளது.

அண்மையில் முடிவடைந்த மகளிர் உலகக் கோப்பை கிரிக்கெட் போட்டியில் இந்திய அணி 52 ரன்கள் வித்தியாசத்தில் தென் ஆப்பிரிக்க அணியை வென்று கோப்பையை முதன்முறையாகக் கைப்பற்றியது. இந்திய அணியில் இடம்பிடித்த ரிச்சா கோஷ் ஒட்டுமொத்தமாக தொடரில் 235 ரன்கள் விளாசினார்.

மேலும், இந்த உலகக் கோப்பை தொடரில் ரிச்சா கோஷ் 12 சிக்ஸர்களை விளாசியிருந்தார். இதன் மூலம் ஓர் உலகக் கோப்பை தொடரில் அதிக சிக்ஸர்கள் விளாசிய மேற்கு இந்தியத் தீவுகள் அணி வீராங்கனை தியாந்த்ரா தோட்டினின் சாதனையை ரிச்சா கோஷ் சமன் செய்திருந்தார்.

இதையடுத்து அவருக்கு வரும் 8ம் தேதி கொல்கத்தா ஈடன் கார்டன் மைதானத்தில் பிரமாண்டமான முறையில் பாராட்டு விழாவை மேற்கு வங்க கிரிக்கெட் சங்கம் நடத்தவுள்ளது.

அப்போது அவருக்கு தங்க முலாம் பூசப்பட்ட பேட், பந்து ஆகியவற்றை பரிசாக மேற்கு வங்க கிரிக்கெட் சங்க நிர்வாகிகள் வழங்கி கவுரவிக்க உள்ளனர்.



## மிட்செல் சாண்ட்னர் போராட்டம் வீண்: டி20ல் நியூஸிலாந்தை வீழ்த்தியது மே.இ.தீவுகள்

நியூஸிலாந்து மேற்கு இந்தியத் தீவுகள் இடையிலான முதல் டி20 கிரிக்கெட் போட்டி நேற்று ஆக்லாந்தில் உள்ள ஈடன் பார்க் மைதானத்தில் நடைபெற்றது. முதலில் பேட் செய்த மேற்கு இந்தியத் தீவுகள் அணி 20 ஓவர்களில் 6 விக்கெட்கள் இழப்புக்கு 164 ரன்கள் எடுத்தது.

அதிகபட்சமாக கேப்டன் ஷாய் ஹோப் 39 பந்துகளில், 3 சிக்ஸர்கள், 4 பவுண்டரிகளுடன் 53 ரன்கள் விளாசினார். ரோவ்மன் பவல் 33, ராஸ்டன் சேஸ் 28, அலிக் அதானஸ் 16 ரன்கள் சேர்த்தனர்.

165 ரன்கள் இலக்குடன் பேட் செய்த நியூஸிலாந்து அணி 16.4 ஓவர்களில் 107 ரன்களுக்கு 9 விக்கெட்களை இழந்து தோல்வியின் பிடியில் சிக்கியது. டிம் ராபின்சன் 27, டேவன் கான்வே 13, ரச்சின் ரவீந்திரா 21, மார்க் சாப்மேன் 7, டேரில் மிட்செல் 13, மைக்கேல் பிரேஸ்வெல் 1, ஜேம்ஸ் நீஷாம் 11, சாக் ஃபோல்க்ஸ் 1, கைல் ஜேமிசன் 2 ரன்களில் ஆட்டமிழந்தனர்.

கைவசம் ஒரு விக்கெட் மட்டுமே இருந்த நிலையில் வெற்றிக்கு 20 பந்துகளில், 58 ரன்கள் தேவை என்ற நிலையில் கேப்டன் மிட்செல் சாண்ட்னர் போராடினார். மேத்யூ ஃபோர்டு வீசிய 18வது ஓவரில் 4 பவுண்டரிகள், ஒரு சிக்ஸரையும் ஜேசன் ஹோல்டர் வீசிய அடுத்த ஓவரின் முதல் 3 பந்துகளையும் பவுண்டரிக்கு விரட்டி அசத்தினார் மிட்செல் சாண்ட்னர்.

அதிரடியாக விளையாடிய மிட்செல் சாண்ட்னர் 28 பந்துகளில், சிக்ஸர்கள், 8 பவுண்டரிகளுடன் 55 ரன்கள் சேர்த்த போதிலும் வெற்றியை வசப்படுத்த முடியாமல் போனது. முடிவில் 20 ஓவர்களில் நியூஸிலாந்து அணி 9 விக்கெட்கள் இழப்புக்கு 157 ரன்கள் எடுத்து தோல்வி அடைந்தது. ரோமாரியோ ஷெப்பர்டு வீசிய கடைசி ஓவரில் நியூஸிலாந்து அணியின் வெற்றிக்கு 20 ரன்கள் தேவையாக இருந்தன. முதல் 2 பந்துகளில் ரன்கள் சேர்க்காத சாண்ட்னர், கடைசி 4 பந்துகளில் 12 ரன்கள் சேர்த்தார். இதில் தலா ஒரு சிக்ஸர், பவுண்டரி அடங்கும்.

ஒரு கட்டத்தில் நியூஸிலாந்து அணி 10 ஓவர்களில் 2 விக்கெட்கள் இழப்புக்கு 70 ரன்கள் சேர்த்து வலுவாகவே இருந்தது. ஆனால் மேற்கொண்டு 37 ரன்களை எடுப்பதற்குள் 7 விக்கெட்களை கொத்தாக தாரைவார்த்தது. இதுவே அந்த அணியின் வீழ்ச்சிக்கு முக்கிய காரணமாக அமைந்தது.

மேற்கு இந்தியத் தீவுகள் அணி சார்பில் ஜெய்டன் சீல்ஸ், ராஸ்டன் சேஸ் ஆகியோர் தலா 3 விக்கெட்களை வீழ்த்தினர். 7 ரன்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்ற மேற்கு இந்தியத் தீவுகள் அணி 5 ஆட்டங்கள் கொண்ட டி 20 தொடரில் 10 என முன்னிலை வகிக்கிறது.



## விஜய்யின் ‘ஜனநாயகன்’ புதிய போஸ்டர் வை

ரல் முதல் சிங்கிள் சனிக்கிழமை ரிலீஸ்!

விஜய் நடித்துள்ள ‘ஜனநாயகன்’ படத்தின் புதிய போஸ்டர் சமூக வலைதளங்களில் வைரலாகி வருகிறது.

கே.வி.என் நிறுவனம் தயாரிப்பில் உருவாகி வரும் படம் ‘ஜனநாயகன்’. விஜய், பூஜா ஹெக்டே, பாபி தியோல், கௌதம் மேனன், ப்ரியாமணி, நரேன், மமிதா பைஜு உள்ளிட்ட பலர் நடித்துள்ள இப்படத்தினை ஹெச்.வினோத் இயக்கியுள்ளார். அனிருத் இசையமைப்பாளராக பணிபுரிந்து வருகிறார். இப்படம் பொங்கல் பண்டிகையை முன்னிட்டு வரும் ஜனவரி 09 அன்று வெளியாகும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

கரூர் நெரிசல் சம்பவம் காரணமாக இப்படம் குறித்த அறிவிப்பு எதையும் வெளியிடாமல் இருந்து வந்தது படக்குழு. இந்த நிலையில் விஜய் மீண்டும் அரசியல் களத்துக்கு வந்த நிலையில், தற்போது இப்படத்தின் புதிய போஸ்டர் ஒன்று வெளியிடப்பட்டுள்ளது. அதில் விஜய் நடுவில் நிற்க அவரை சுற்றி நிற்கும் மக்கள் அனைவரும் அவர் நெஞ்சின் மீது கை வைத்திருக்கின்றனர். இந்த போஸ்டர் சமூக வலைதளங்களில் வைரலாகி வருகிறது.

மேலும் இப்படத்தின் முதல் பாடல் வரும் நவம்பர் 8 (சனிக்கிழமை) அன்று வெளியாகும் என்று படக்குழு அறிவித்துள்ளது. இது படத்தில் விஜய்யின் அறிமுகப் பாடலாக இருக்கலாம் என்று கூறப்படுகிறது.

## நடிகர் துல்கர் சல்மானுக்கு நுகர்வோர் நீதிமன்றம் நோட்டீஸ்

நடிகர் துல்கர் சல்மானுக்கு நுகர்வோர் நீதிமன்றம் நோட்டீஸ் பிரபல நடிகர் துல்கர் சல்மான், கேரளாவில் உள்ள பிரபலமான பிரியாணி அரிசியின் விளம்பர தூதராக இருக்கிறார்.

அவர் மீது, பத்தனம்திட்டா மாவட்டத்தைச் சேர்ந்த கேட்டரிங் நிறுவனம் ஒன்றின் ஊழியர் பி.என். ஜெயராஜன் என்பவர், நுகர்வோர் ஆணையத்தில் வழக்கு தொடர்ந்தார். அதில், “திருமண விழாவுக்காக, குறிப்பிட்ட பிராண்டின் 50 கிலோ பிரியாணி அரிசியை, ஆகஸ்ட் மாதம் வாங்கினோம்.

அதில், அந்த அரிசி எப்போது பேக் செய்யப்பட்டது, காலாவதி தேதி உள்ளிட்ட எதுவும் இல்லை. அதில் சமைத்த பிரியாணியைச் சாப்பிட்ட பலருக்கு உடல்நலக்குறைவு ஏற்பட்டது. இதனால் அந்த அரிசி நிறுவனத்தின் உரிமையாளர், விளம்பர தூதரான நடிகர் துல்கர் சல்மான், அரிசியை விற்ற கடை உரிமையாளர் ஆகியோர் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும்” என்று கூறியிருந்தார்.

மேலும் இப்பிரச்சினை காரணமாகத் தனது கேட்டரிங் தொழிலின் நம்பகத்தன்மை பாதித்துவிட்டதாகவும் பல திருமண முன்பதிவுகள் ரத்து செய்யப்பட்டதாகவும் குற்றம் சாட்டினார். இதையடுத்து இது தொடர்பாக விளக்கம் கேட்டு துல்கர் சல்மான், அரிசி நிறுவன உரிமையாளர் ஆகியோர் டிச.3ம் தேதி நேரில் ஆஜராக நுகர்வோர் ஆணையம் நோட்டீஸ் அனுப்பியுள்ளது.





## ‘காவலன்’ செயலியால் உருவான ‘தி டிரெய்னர்’!

ஸ்ரீகாந்த், ஷாம் நடித்துள்ள த்ரில்லர் படம், ‘தி டிரெய்னர்’. ஜூனியர் எம்.ஜி. ஆர், பிரின்ஸ் சால்வின், அஞ்சனா கிருத்தி, புஜிதா பொன்னாடா, வாகை சந்திரசேகர், சாய் தீனா, லதாராவ், ஜே.ஆர்.எம்.ராஜ்மோகன், பிரியங்கா ராய் என பலர் நடித்துள்ளனர். டிரான்ஸ் இந்தியா மீடியா மற்றும் என்டர்டெயின்மென்ட் நிறுவனம் சார்பில் நீலா தயாரிக்கிறார். பி.வேல்மாணிக்கம் இயக்கியுள்ள இப்படத்துக்கு அருள்மொழி சோழன் ஒளிப்பதிவு செய்துள்ளார். கார்த்திக் ராஜா இசை அமைத்திருக்கிறார்.

“பெண்களின் பாதுகாப்பு மற்றும் முன்னேற்றத்துக்காக தமிழ்நாடு போலீஸார் உருவாக்கிய ‘காவலன்’ செயலியில் இருந்து உத்வேகம் பெற்று சமூகத்துக்குத் தேவையான படமாக இது உருவாகியுள்ளது. நடிகர் காந்த், நாய் பயிற்சியாளராக நடித்துள்ளார். அவருடன் ‘லீ’ என்ற நாயும் முக்கிய கதாபாத்திரமாக வருகிறது.

ஜூனியர் எம்.ஜி.ஆர், வில்லன் கதாபாத்திரத்தில் நடித்துள்ளார். அவருடைய செல்வாக்கின் கீழ் குற்றச் செயல்களில் ஈடுபடும் மர்ம கும்பலைச் சுற்றிக் கதை சுழல்கிறது. போலீஸ் அதிகாரி ஷாம், காந்தை குற்றவாளி என்று தவறாக நினைக்கிறார். தன்னை நிரூபிக்க அவர் என்ன செய்கிறார் என்பது கதை” என்றது படக்குழு. விரைவில் படம் வெளிவரும் எனத் தெரிவித்துள்ளனர்.




# டிவிஎஸ் மோட்டார் நிறுவனத்தின் டிவிஎஸ் ஆர்பிட்டர் மின்சார வாகனம் கோவையில் அறிமுகம்

கோவை, நவ.09-

கோவை மாவட்டம் சின்னியம்பாளையம் பகுதியில் உள்ள தனியார் நட்சத்திர விடுதியில் டிவிஎஸ் மோட்டார் நிறுவனத்தின் டிவிஎஸ் ஆர்பிட்டர் மின்சார வாகனத்தை டிவிஎஸ் மோட்டார் நிறுவனத்தின் மார்க்கெட்டிங் ஈ.வி பிசினஸ் டிஜிஎம் ரிஷீ குமார் அறிமுகம் செய்து மின்சார வாகனம் பயன்பாடு குறித்து எடுத்துரைத்தார்.

டிவிஎஸ் மின்சார வாகனம் ஆர்பிட்டர் ஒருமுறை சார்ஜ் செய்தாலே 158 கிலோ மீட்டர் வரை பயணிக்கலாம் எனவும் க்ரூஸ் கண்ட்ரோல்,34 லிட்டர் பூட் ஸ்பேஸ்,ஹில் ஹோல்ட் அசிஸ்ட் மற்றும் மேம்படுத்தப்பட்ட தொழில் நுட்பங்கள் கொண்டு உருவாக்கப் பட்டுள்ளது.இதன் விலை 1,03,100 ரூபாய் மற்றும் எக்ஸ்ஷோரூம்,பி.என் இடிரைவ் திட்டம் உட்பட விலையில் விற்பனை செய்யப்படுகிறது.

டிவிஎஸ் ஆர்பிட்டர் மின்சார வானம் 5க்கும் மேற்பட்ட கண்கவர் வண்ண ங்களிலும் 3.1 கிலோ வாட் லித்தியம் பேட்டரி மூலம் உருவாக்கப்பட்டுள்ளது. செயல் திறன் மற்றும் வாகனத்தை கட்டுப்படுத்த பிரத்தியேகமாக உருவாக்கப்பட்டுள்ளது.





# தமிழக விவசாயிகள் பாதுகாப்பு சங்கம் - தாராபுரத்தில் ஆலோசனை கூட்டம்

திருப்பூர், நவ.10-

திருப்பூர் மாவட்டம் தாராபுரம் புறவழிச் சாலையில் உள்ள குமரன் அரங்கில், தமிழக விவசாயிகள் பாதுகாப்பு சங்கத்தின் விவசாயிகள் உரிமை மீட்பு, கடன் விடுதலை முதல் மாநாடு குறித்து ஆலோசனை கூட்டம் நடைபெற்றது.

இந்தக் கூட்டத்துக்கு சங்கத்தின் மாநிலத் தலைவர் சண்முகசுந்தரம் தலைமையில, திருப்பூர் கிழக்கு மாவட்ட செயலாளர் கோபாலகிருஷ்ணன், கறிக்கோழி பண்ணை செயலாளர் ஏபிடி மகாலிங்கம், உழவர் சந்தை அணி மாநில செயலாளர் ரமேஷ், மாநில நிதிக்குழு தலைவர் கோனார்பட்டி பாலசுப்பிரமணியம், மகளிர் அணி சித்ரா, லீலாவதி, ஒன்றியச் செயலாளர் கணேசன், குமரேசன், ஈஸ்வரன் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

தாராபுரம் சட்டமன்ற தொகுதியிலிருந்து 75,000 விவசாயிகள் ஈரோடு விஜயமங்கலம் டோல்கேட் அருகே டிசம்பர் 28, 2025 அன்று நடைபெறும் மாநில மாநாட்டில் பங்கேற்கவுள்ளதாக தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. மேலும், வரும் 2026 சட்டமன்றத் தேர்தலில் தாராபுரம் தொகுதியில் யாரை விவசாயிகள் முடிவு செய்கிறார்களோ, அவரே எம்எல்ஏ ஆவார் எனவும் அறிவிக்கப்பட்டது.

மாநாட்டில் தமிழகம் முழுவதும் இருந்து 10 லட்சத்திற்கும் மேற்பட்ட விவசாயிகள் பங்கேற்கவுள்ளதாகவும், பல்வேறு கோரிக்கைகள் முன்வைக்கப்படவு ள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

முக்கிய கோரிக்கைகள்:

அனைத்து பயிர், நீண்டகால, மத்தியகால, டிராக்டர் கடன்களையும் மத்திய, மாநில அரசுகள் தள்ளுபடி செய்ய வேண்டும்.

தமிழ்நாடு அரசு ஏக்கருக்கு ரூ.30,000 டற்பத்தி மானியம் வழங்க வேண்டும்.

தமிழ்நாட்டில் இனாம் நிலங்களின் உரிமை விவசாயிகளுக்கு உறுதி செய்ய புதிய சட்டம் இயற்ற வேண்டும்.

தென்னை, பனை கள் தடையை நீக்க வேண்டும்.

பாமாயிலுக்கு பதிலாக நியாய விலை கடைகளில் நல்லெண்ணெய், தேங்காய் எண்ணெய் விற்பனை செய்ய வேண்டும்.

நெல் குவிண்டாலுக்கு ரூ.4,000, கரும்பு டன்னுக்கு ரூ.5,000, மஞ்சள் குவிண்டாலுக்கு ரூ.15,000 விலை வழங்க வேண்டும்.

மாட்டுப் பாலுக்கு ரூ.50, எருமை பாலுக்கு ரூ.75 நிர்ணயம் செய்ய வேண்டும்.

காட்டு பன்றியை கட்டுப்படுத்த சுட்டுக் கொல்ல அனுமதி வழங்க வேண்டும்.

வனவிலங்குகள் தாக்கி உயிரிழந்தோரின் இழப்பீட்டை ரூ.25 லட்சமாக உயர்த்த வேண்டும்.

மயில், மான், யானை, குரங்கு தாக்குதலால் ஏற்பட்ட சேதங்களுக்கு சந்தை மதிப்பில் இழப்பீடு வழங்க வேண்டும்.

மரபணு மாற்றப்பட்ட விதைகள் விற்பனையை நிரந்தரமாக தடை செய்ய வேண்டும்.

உயர்மின் கோபுரங்கள் புதைவடங்களாக அமைக்கப்பட வேண்டும், ஏற்கனவே அமைக்கப்பட்ட திட்டங்களுக்கு 100% இழப்பீடு வழங்க வேண்டும்.

பிஏபி, அமராவதி, நல்லதங்காள் ஓடை, உப்பாறு அணை உள்ளிட்ட பாசனத் திட்டங்கள் விரைவில் நிறைவேற்றப்பட வேண்டும்.

இந்த விவரங்களைத் தெரிவித்த நிதிக்குழு உறுப்பினர் பாலசுப்பிரமணியம், "விவசாயிகளின் நலனுக் காகக் கோரிக்கை களை வலியுறுத்தி, தமிழகம் முழுவதும் விவசாயிகளை ஒன்றிணைக்கும் நோக்கில் இந்த மாநாடு நடைபெற உள்ளது," என்றார்.

பேட்டி: திரு. பாலசுப்பிரமணியம், நிதிக்குழு உறுப்பினர், தமிழக விவசாயிகள் பாதுகாப்பு சங்கம்.




# வரவிருக்கும் உலக அமைதி தினம் ஷி நவம்பர் 11ஆம் தேதி, செவ்வாய்க்கிழமை முன்னிட்டு, மாநிலம் முழுவதும் அமைதிப் பேரணிகள் நடைபெற்றன

குரோம்பேட்டை, நவ.10-

சென்னையில், உலக சமாதான ஆலயம் சார்பில் செங்கல்பட்டு மாவட்டம் குரோம்பேட்டையில் காலை ஆறு மணிக்கு, எம்.ஐ.டி. பாலம் அருகிலிருந்து சிட்லபாக்கம் ஏரிக்கு எதிரிலுள்ள சென்னை சபை வரை அமைதிப் பேரணி நடைபெற்றது.

இந்த நிகழ்ச்சியில், உலக சமாதான அறக்கட்டளை - சென்னை சபை சிட்லபாக்கம், தாம்பரம் மாநகராட்சி 43வது மாமன்ற உறுப்பினர் மற்றும் அரிமா சங்க முன்னாள் ஆளுநர் சி. ஜெகன், மேலும் நல்லோர் வட்டம் பாலு குழுவினர் கலந்து கொண்டனர்.

அமைதி, அன்பு, ஒற்றுமை நிறைந்த சமூகத்தைக் கட்டியெ ழுப்பும் நோக்கில் நடைபெற்ற இப்பேரணியில், அனைவரும் கலந்து கொண்டு உலக அமைதி க்காக பிரார்த்திக்க அழைக் கப்பட்டனர்.

உலக சமாதான அறக்கட்டளை சார்பில் பேசுகையில்,

"உலகப் போர் முடிந்தபின் உலக அமைதிக்காக ஒரு நிமிடம் பிரார்த்தனை செய்யும் பழக்கம் இருந்தது. அதனை மீண்டும் மக்களிடையே கொண்டு வரவே, ஒவ்வொரு நாளும் காலை 11 மணி 11 நிமிடத்திற்கு, உலகம் முழுவதும் மக்கள் ஒரு நிமிடம் அமைதிக்காக சிந்தனை செய்ய வேண்டும்," என தெரிவித்தனர்.

மேலும், "அடுத்த ஆண்டு ஜெனிவா நகரில் குருமார்களுடன் இணைந்து உலக அமைதிக்கான மனு சமர்ப்பிக்க திட்டமிடப்பட்டுள்ளது," என்றும் கூறினர்.





# பழனியில் பாட்டாளி மக்கள் கட்சி வடக்கு மாவட்ட சார்பில் மாவட்ட செயற்குழு கூட்டம் நடைபெற்றது

திண்டுக்கல், நவ.10-

திண்டுக்கல் மாவட்டம் பழனியில் பாட்டாளி மக்கள் கட்சி மாவட்ட அலுவலகம் வைரமுத்து தலைமையில் வடக்கு பாட்டாளி மக்கள் கட்சி முன்னிலை கணேசன், திண்டுக்கல் மாவட்ட தலைவர் ராஜரத்தினம் பாட்டாளி தொழில் சங்க மாவட்ட செயலாளர் வடக்கு வடமதுரை குமார் மாவட்ட துணை செயலாளர் பா குமரி ஆனந்தன் மாவட்ட துணை தலைவர் வரவேற்புரை. நடராஜ் பாண்டியன் தலைமை ஏற்று சிறப்புரை ஆற்றினார் வைரமுத்து திண்டுக்கல் மாவட்ட செயலாளர் வடக்கு நிகழ்ச்சியில் பங்கேற்றவர்கள் ஒட்டன்சத்திரம் நகர செயலாளர் அர்ஜுன் கொடைக்கானல் நகர செயலாளர் கோபிநாத் பழனி ஒன்றிய செயலாளர் கிழக்கு ஜஸ்டின் பாபு பழனி ஒன்றிய தலைவர் கிழக்கு மதனகோபால் பழனி ஒன்றிய கொள்கை விளக்க அணி தலைவர் மணிகண்டன் ஆயக்குடி பேரூர் செயலாளர் முத்துசாமி நெய்க்காரப்பட்டி பேரூர் செயலாளர் பெரியசாமி தொப்பம்பட்டி ஒன்றிய துணைச் செயலாளர் சரவணன் வடமதுரை ஒன்றிய செயலாளர் வேல்முருகன் வட மதுரை ஒன்றிய தலை வர் கணபதி வேடசந்தூர் கார்த்திக் பழனி நகரப் பொருளாளர் சுதா செல்வராஜ் நன்றி உரை முருகேசன் பழனி நகர செயற்குழு உறுப்பினர்



உலகின் உயரமான கிலிமஞ்சாரோ உஹுரு சிகரம் ஏறி சாதனை படைத்த

# தமிழகத்தைச் சேர்ந்த ஐந்து வயது சிறுவன் சிவ விஷ்ணுவிற்கு, நடிகை குஷ்பூ அன்பு முத்தம் கொடுத்து வாழ்த்தினார்

மீனம்பாக்கம், நவ.10-

ஆப்பிரிக்காவின் தான்சானியாவில் அமைந்துள்ள, 19 ஆயிரத்து 340 அடி உயரமுள்ள கிலிமஞ்சாரோ சிகரம், உலகின் உயரமான சிகரங்களில் ஒன்றாகும்.

இந்த சிகரத்தை ஐந்து வயதில் ஏறி, உலகில் இளம் வயதில் இந்த சாதனை படைத்த மூன்றாவது குழந்தையாக விஷ்ணு பெயர் பதிந்துள்ளார்.

தமிழ் அட்வென்ச்சர் டிரக்கிங் கிளப் சார்பாக முத்தமிழ்செல்வி தலைமையில் சென்ற குழுவினர், நவம்பர் ஒன்றாம் தேதி ஏற்றம் தொடங்கி, ஏழு நாள் பயணத்திற்குப் பிறகு சிகரத்தை வெற்றிகரமாக அடைந்தனர்.

இந்த குழுவில் விருதுநகர், காங்கயம், கோவை, கடலூர், சென்னை உள்ளிட்ட பல மாவட்டங்களைச் சேர்ந்த குழந்தைகள் மற்றும் இளைஞர்கள் பங்கேற்றனர்.

சென்னை விமான நிலையம் வந்தபோது, உறவினர்கள் உற்சாக வரவேற்பு அளித்தனர். அப்போது, ஹைதராபாத் விமானத்தில் வந்து இறங்கிய நடிகை குஷ்பூ, சிறுவன் விஷ்ணுவுக்கு அன்பு முத்தம் கொடுத்து பாராட்டினார்.

# ரவுடி நாகேந்திரன் உயிரோடுதான் இருக்கிறார்; பிளாஸ்டிக் சர்ஜரி செய்து போலீஸார் தப்பிக்க வைத்துவிட்டனர்

சென்னை, நவ.10-

'ஆம்ஸ்ட்ராங் கொலை வழக்கில் முதல் குற்றவாளியாக கைதாகி சிகிச்சையில் இருந்த ரவுடி நாகேந்திரன் இன்னும் இறக்கவில்லை. ஸ்டான்லி அரசு மருத்துவமனையில் அவருக்கு பிளாஸ்டிக் சர்ஜரி செய்து போலீஸார் தப்பிக்க வைத்துவிட்டனர்' என்று பகுஜன் சமாஜ் கட்சியின் மாநிலத் தலைவரான வழக்கறிஞர் ஆனந்தன் சென்னை முதன்மை அமர்வு நீதிமன்றத்தில் தெரிவித்துள்ளார்.

பகுஜன் சமாஜ் கட்சியின் மாநிலத் தலைவராக இருந்த ஆம்ஸ்ட்ராங் கடந்த 2024 ஜூலையில் சென்னையில் உள்ள அவரது வீட்டின் அருகே ஒரு கும்பலால் வெட்டிப் படுகொலை செய்யப்பட்டார். ஏற்கெனவே பல்வேறு வழக்குகளில் கைதாகி சிறையில் இருந்த பிரபல ரவுடியான நாகேந்திரன் இந்த கொலை வழக்கில் முதல் குற்றவாளியாக கைது செய்யப்பட்டார். அவரது மகன்கள் உட்பட மொத்தம் 27 பேர் இந்த வழக்கில் கைது செய்யப்பட்டனர். இந்த வழக்கு விசாரணையை சிபிஐக்கு மாற்றி சென்னை உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

இந்தச் சூழலில், ஆம்ஸ்ட்ராங் கொலை வழக்கில் கைதாகி, உடல் நலக் குறைவு காரணமாக சென்னை ஸ்டான்லி அரசு மருத்துவமனையில் சிகிச்சையில் இருந்த ரவுடி நாகேந்திரன் கடந்த மாதம் உயிரிழந்தார். இந்நிலையில், இந்த வழக்கில் நாகேந்திரனின் மகன் அஸ்வத்தாமன் உள்ளிட்ட 12 பேர் ஜாமீன் கோரி சென்னை முதன்மை அமர்வு நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்திருந்தனர். நீதிபதி எஸ்.கார்த்திகேயன் முன்பு இந்த மனு மீதான விசாரணை நடந்தது. அப்போது, "இந்த வழக்கை சிபிஐக்கு மாற்றி உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளநிலையில், வழக்கின் கோப்புகளை தமிழக காவல் துறை இன்னும் சிபிஐ வசம் ஒப்படைக்கவில்லை. கடந்த ஒன்றரை ஆண்டுகளாக சிறையில் உள்ள எங்களுக்கு ஜாமீன் வழங்க வேண்டும்" என்று மனுதாரர்கள் தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

அப்போது, இந்த வழக்கின் இடையீட்டு மனுதாரரான ஆம்ஸ்ட்ராங்கின் சகோதரர் கீனோஸ் தரப்பில் வழக்கறிஞரும், பகுஜன் சமாஜ் கட்சியின் தற்போதைய மாநிலத் தலைவருமான பி.ஆனந்தன் ஆஜரானார். அவர் கூறியதாவது: ஆம்ஸ்ட்ராங் கொலை வழக்கை தமிழக போலீஸார் முறையாக விசாரிக்கவில்லை என்பதால்தான் விசாரணை சிபிஐக்கு மாற்றப்பட்டுள்ளது. சமீபத்தில் உயிரிழந்ததாக கூறப்படும் இந்த வழக்கின் முதல் குற்றவாளியாக உள்ள நாகேந்திரன் இன்னும் இறக்கவில்லை. அவருக்கு ஸ்டான்லி அரசு மருத்துவமனையில் பிளாஸ்டிக் சர்ஜரி செய்து போலீஸார் அவரை தப்பிக்க வைத்துள்ளனர்.

நாகேந்திரனின் உருவத்துக்கும், இறந்ததாக தெரிவித்து ஒப்படைக்கப்பட்ட உடலுக்கும் நிறைய வித்தியாசம் உள்ளது. இந்த வழக்கில் பல்வேறு மர்மங்கள் உள்ளன. எனவே, இந்த சூழலில் மனுதாரர்கள் யாருக்கும் ஜாமீன் வழங்கக் கூடாது. இவ்வாறு அவர் கூறினார். இதையடுத்து, ஜாமீன் மனுக்கள் மீதான உத்தரவை நவ.10ம் தேதிக்கு (நாளை) நீதிபதி தள்ளி வைத்தார்.





# இளமனூர் : தேவேந்திரகுல இளைஞர்கள் மீது பொய் வழக்கை இரத்து செய்ய கோரி பல்வேறு அமைப்பினர் கோரிக்கை

இளையான்குடி, அக் 10-

சிவகங்கை மாவட்டம், இளையான்குடி சரகத்திற்கு உட்பட்ட இளமனூர் கிராமத்தில் பாதிக்கப்பட்ட தேவேந்திர குல மக்கள் மீது போடப்பட்ட பொய் வழக்கை இரத்து செய்யக் கோரியும் சாதி வெறி தாக்குதல் நடத்திய உண்மை குற்றவாளிகளை கைது செய்ய வலியுறுத்தியும் சாதிய வன்முறை பரவாமல் தடுக்க உரிய பாதுகாப்பு நடவடிக்கை எடுத்திட கோரியும் இளையான்குடி, திருவுடையார்புரம் வீரமணி மீது சாதி வெறி தாக்குதல் நடத்திய கயவனை கைது செய்ய வழியுறுத்தியும் தியாகி இமானுவேல் பேரவை ஒருங்கிணைப்பில் கடந்த (08/11/2025) இளையான்குடியில் ஆர்ப்பாட்டம் நடத்துவதற்கு முயன்றபோது, காவல்துறை தடுத்து நிறுத்தி, மேற்படி ஆர்பாட்டத்திற்கு அனுமதியானது மறுக்கப்பட்டது நியாயமான கோரிக்கைகளை ஏற்று அரசு உரிய சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும் என்ற கோரிக்கையை தொடர்ந்து.

எதிர்வரும் திங்கள்கிழமை உயர் அதிகாரிகளை சந்தித்து பேச ஏற்பாடுகள் செய்வதாகவும் உறுதியளித்தனர். பேச்சுவார்த்தையின் மூலம் கோரிக்கை நிறைவேற பட்சத்தில், எதிர்வரும் 17ஆம் தேதி மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் இளையான்குடியில் நடத்துவது என்ன முடிவு செய்யப்பட்டுள்ளது. இக்கூட்டத்தில் தியாகி இமானுவேல் பேரவை முதன்மைச் செயலாளர் வழக்கறிஞர் வீ.பி வேல்முருகன், மாநிலச் செயலாளர் இல.கிருஷ்ண மூர்த்தி ,மாநில இளைஞரணி செயலாளர் ந.பெரியசாமி , மாநில பொருளாளர் க.முருகேசன் ,முகவை மாவட்ட செயலாளர் வீர.ஜெகதீசன்,மாவட்டத் தலைவர் த.ஆறுமுகம் ,மாவட்டச் செயலாளர் மு.சத்தியமூர்த்தி மாவட்ட பொருளாளர் வழக்கறிஞர் நெஞ்சை கர்ணன்,மாவட்ட இளைஞரணி செயலாளர் த.ரமேஷ் தமிழ்நாடு தீண்டாமை ஒழிப்பு முன்னணி மாவட்ட பொறுப்பாளர்கள் கருப்புசாமி முத்துராமலிங்க பூபதி, வீரையா, தென்னரசு,தமிழக மக்கள் முன்னேற்ற கழகம் மாவட்டச் செயலாளர் இடைக்காட்டூர் சுரேஷ், விடுதலைச் சிறுத்தை கட்சி மாவட்டச் செயலாளர் வழக்கறிஞர் பாலையா தாலுகா செயலாளர் ஜேம்ஸ் வளவன் மற்றும் தியாகி இமானுவேல் பேரவையின் மாநில மாவட்ட ஒன்றிய பொறுப்பாளர்கள் மற்றும் இளையான்குடி சுற்றுவட்டார 200 பெண்கள் உட்பட்ட 400 மேற்பட்ட தேவேந்திர குல மக்கள் கலந்து கொண்டனர்..

Printed by A.PONRAJ, published ,owned by A.PONRAJ and printed at "SRI SAAI PRINTERS"No.122,Neethipathi, Rajasekaran Street,vaarasanthai road,Sivaganga and published at 6 a, madurai road Sivaganga, Sivaganga district,Editor A.PONRAJ. Ph: 8508502161